# இலக்கு


இதழ் 97

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ் செப்டம்பர் 27, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

## தமிழீழ விடுதலைப் பாடல்களும் எஸ்.பி. பாலசுப்பிரமணியமும்

ஓவியர் புகழேந்தி



## தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களை சிங்களம் தான் தீர்மானிக்கின்றது

இராமு மணிவண்ணன்



## சீனாவில் கலாச்சார இனவழிப்புக்கு உள்ளாகும் 'உவீகர்' இன முஸ்லிம் மக்கள்

தமிழில் ஜெயந்திரன்

## திலீபனுக்காக இணைந்த தமிழ்க் கட்சிகள்; ஐக்கியம் தொடரும் வாய்ப்பு உள்ளதா?





சீ.வீ.கே.சிவஞானம்

## தமிழ்க் கட்சிகள் பொது விடயங்களில் ஒரு மையப் புள்ளியில் இணைவார்கள்



## திலீபனின் கனவுடன் எங்கள் மண் இன்னும்....

ராஜன்

# பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியில் 108 பானைகளில் உரிமை பொங்கல்





வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரரின் வருடாந்த பொங்கல் விழாவின் இறுதிநாள் அன்று 108 பானைகள் வைத்து நடத்தப்படும் உரிமை பொங்கல் விழா நேற்று கோலகலமாக நடைபெற்றுள்ளது.

வவுனியா வடக்கு நெடுங்கேணி, வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரரின் வருடாந்த பொங்கல் விழா நிகழ்வு கடந்த 17ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது நாட்கள் இடம்பெற்று நேற்று பத்தாம் நாள் இறுதி நிகழ்வுகள் நடைபெற்றது.

அந்த வகையில் ஆலய வளாகத்தில் 108 பானைகளில் பொங்கல் பொங்கி விசேட பூஜை நிகழ்வுகளுடன் பொங்கல் விழா நிகழ்வுகள் இடம் பெற்றது.

நேற்றுக் காலை11 மணிக்கு ஆரம்பமாகிய பூசைநிகழ்வுகளில் வவுனியாமற்றும் யாழ்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள்

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

# கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கலாம்

இலங்கையில் குறைவடைந்திருந்த டெங்கு நோய் தற்போது மீண்டும் அதிகரித்து வருவதாக இலங்கை டெங்கு நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது டெங்கு நோயின் தாக்கம் இலங்கையில் மிகவும் குறைவடைந்திருந்தது. ஆனால் தற்போது அது மீண்டும் அதிகரித்து வருகின்றது. கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் கல்முனை பகுதிகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 9 மாதங்களில் 30 பேர் இந்த நோயினால் இறந்துள்ளனர். கோவிட்-19 நோயின் தடுப்பு முறைகளால் டெங்கு நோயின் தாக்கம் இந்த வருடம் குறைந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

# 13ஆவது திருத்தம் குறித்து மோடி முன்வைத்த வேண்டுகோளும் மௌனம் காத்த மகிந்தவும்





13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி விடுத்த வேண்டுகோளிற்கு இலங்கை உறுதி மொழி எதனையும் வழங்கவில்லை என்பதை இராஜதந்திர வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் இலங்கை அரசாங்கத்தை தமிழ் மக்களின் ஐக்கிய இலங்கைக்குள்ளான சமத்துவம், நீதி, கௌரவம் குறித்த அபிலாசைகளுக்கு தீர்வை காணுமாறு கேட்டுக்கொண்டுள்ள இந்திய பிரதமர் மோடி, 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை, இந்தியப் பிரதமர்களிடையேயான காணொளி மூலமான உச்சி மாநாடு நேற்று

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# புதிய திருத்தச் சட்டத்திற்கு ஐந்து பொதுநலவாய அமைப்புக்கள் எதிர்ப்பு



சிறீலங்கா அரசு கொண்டுவந்துள்ள 20ஆவது திருத்தச் சட்டத்திற்கு பொதுநலவாய நாடுகள் அமைப்பைச் சேர்ந்த 5 அமைப்புக்கள் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

புதிய சட்டம் நீதிக்கான சுதந்திரத்தை பாதிக்கும் என அவை தெரிவித்துள்ளன. பொதுநலவாய நீதிபதிகள் அமைப்பு, பொதுநலவாய சட்ட கற்கைநெறிகள் சபை, பொதுநலவாய சட்டவாளர்கள் அமைப்பு, ஊடகவியலாளர்கள் அமை ப்பு, நீதிபதிகளுக்கான அமைப்பு ஆகியவையே இந்த கண்டன அறிக்கையை இந்த வாரம் வெளியிட்டுள்ளன.

நீதியாளர்களை நியமிக்கும் அதிகாரமானது அரசியல் அமைப்பு சபையிடம் இருந்து நீக்கப்பட்டது மிகவும் ஆபத்தானது. சிறீலங்கா அரசு கொண்டுவந்துள்ள இந்த புதிய சட்டமானது பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அடிப்படை கோட்பாடுகளுக்கு உட்பட்டதாகவும், அனைத்துலக விதிகளின் தரத்தை கொண்டதாகவும் இருக்க வேண்டும் என அவை தெரிவித்துள்ளன.

# இந்தியப் பிரதமர் மோடியின் கருத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பு

ஒன்றிணைந்த சிறீலங்காவிற்குள் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் மரியாதை ஆகியவற்றுக்கான தமிழர்களின் அபிலாசைகளை நிவர்த்தி செய்ய இந்தியப் பிரதமர் மோடி சிறீலங்காவிற்கு விடுத்த அழைப்பை வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சிறீலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இடையே காணொளி வாயிலாக இருதரப்பு கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, அமைதி மற்றும் நல்லிணக்க செயல்முறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# ஐ.நா. பொதுச் சபை கூட்டமும் ரோஹிங்கியா இனப் படுகொலையும்



ஐரோப்பிய ஒன்றியம், இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு, தென்கிழக்காசிய நாடுகளின் கூட் டமைப்பு, உலக நாடுகள் மற்றும் ஐ.நா.உள்ளிட்டவை ரோஹிங்கியா விவகாரம் குறித்த அழுத்தத்தை ஐ.நாபொது சபை கூட்டத்தில் கொடுக்க வேண்டும் என மலேசியாவில் இயங்கும் ரோஹிங்கியா மனித உரிமைகள் அமைப்பு முறையிட்டுள்ளது.

ஐ.நா.பொதுச்சபையின் 75ஆவது கூட்டத் தொடர் நடக்கும் சூழலில், இக்கோரிக்கையினை மலேசியாவில் இயங்கும் ரோஹிங்கியா மனித

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# 20 ஆவது திருத்தத்துக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாளை மனுதாக்கல் – ஹக்கீம்




இலங்கையின் அரசியலமைப்புக்கான 20ஆம் திருத்தச் சட்ட மூல வரைவிற்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்நீதிமன்றம் செல்லவுள்ளதாக அறிவித்துள்ளது.அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் கண்டியில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

20ஆம் திருத்தச்சட்ட மூல வரைவிற்கு எதிராக நாளை திங்கட்கிழமை உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சில குறைபாடுகள் உள்ளதால் புதிய அரசியலமைப்பில் திருத்தம் ஏற்படப்போவதாக சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

# திருமலை வந்த இந்தியக் கப்பலின் பணியாளர் 17 பேருக்கு கொரோனா: திருப்பி அனுப்ப நடவடிக்கை



திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த இந்திய எரிபொருள் கப்பலில் உள்ள பணியாளர்கள் 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பலில் இருந்த ஊழியர் ஒருவருக்கு கொரோனா அறிகுறிகள் காணப்பட்டதையடுத்து, அனைத்து ஊழியர்களுக்கும் PCR பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

4,000 மெற்றிக் தொன் எரிபொருளை தாங்கிய குறித்த கப்பல், திருகோணமலை துறைமுகத்திற்கு வருகை தருவதற்கு முன்னர் கொழும்பு துறைமுகத்திற்கும் சென்றிருந்ததாக விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், கப்பலையும் ஊழியர்களையும் இந்தியாவுக்கு திருப்பியனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# போராட்டத்தில் மரணித்த போராளிகள், பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்துவது எமது உரிமை – சுரேஸ் பிரேமச்சந்திரன்



தமிழ் மக்களின் விடுதலைக்காக மரணித்துப் போனவர்களை அஞ்சலிக்கும் நிகழ்வுகளை அரசாங்கம் தடை செய்வதைக் கண்டித்தும், அஞ்சலிப்பது தமிழ் மக்களின் அடிப்படை உரிமை என்பதை வலியுறுத்தியும் நாளை நடைபெறவிருக்கும் ஹர்த்தாலில் அனைத்து தமிழ் முஸ்லிம் மக்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டி தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார்.

**இது குறித்த அவரது அறிக்கை வருமாறு;**

"தமிழ் மக்களின் விடுதலைக்காக இலட்சக்கணக்கான பொது மக்களும், பல்லாயிரக்கணக்கான போராளிகளும் தமது இன்னுயிரை தியாகம் செய்துள்ளார்கள். அவர்களுக்கான அஞ்சலி செலுத்துவதும் அவர்களை கௌரவப்படுத்துவதும், அவர்களை நினைவு கூருவதும் ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும். இந்த அஞ்சலி என்பது ஐ.நா சாசனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு செயற்பாடுமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த அஞ்சலி நிகழ்வுகளை கடைப்பிடிப்பது என்பது ஒரு போராட்டமாகவே மாறிவருகின்றது.எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் அந்த அரசாங்கங்கள் அதனை தடை செய்வதும் நீதிமன்றங்களின் ஊடாக தடைகளைப் பெற்றுக் கொள்வதும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இந்த வருடமும் உரிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் இந்த அஞ்சலி நிகழ்வுகளு க்கு எதிராக தடைகளைப் பெற்று வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் அஞ்சலி நிகழ்வுகளில் பங்கு கொள்ளக் கூடாது என்ற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த அஞ்சலி நிகழ்வுகளை நடாத்த முற்பட்ட பொழுது ஒவ்வொரு இடத்திலும் அதற்கு எதிரான தடைகளை பொலிஸார் நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக் கொண்டனர். ஆனால், அரசாங்கத்தினுடைய இந்த அடக்குமுறைகளைக் கண்டித்தும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் நோக்கத்துடனும் நேற்றைய தினம் 26.09.2020 அன்று சாவகச்சேரியில் ஓர் உண் ணாநோன்பை வெற்றிகரமாக நடாத்தி முடித்தோம். இராணுவ பொலிஸ் சுற்றிவளைப்புக்குள் இந்த உண்ணாநோன்பு நடைபெற்றது.

இதன் அடுத்த கட்டமாக தமிழ் மக்களினுடைய விடியலுக்காக போராடி மரணித்துப் போன அனைத்து பொதுமக்கள் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் எமது உரிமையை நிலைநாட்டும் பொருட்டு வடக்கு – கிழக்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு ஹர்த்தாலினூடாக எமது கோரிக்கையை வலியுறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. நாம் அனைவரும் இணைந்து இதனை வலியுறுத்தா விட்டால், இலங்கை அரசாங்கம் வட – கிழக்கை தனது சிங்கள - பௌத்த மேலாதிக்கத்துக்குள் கொண்டுவரும். அதற்கான பல்வேறு நட வடிக்கைகளை ஏற்கனவே இந்த அரசாங்கம் எடுத்து வருகின்றது.

இந்த சூழலில்தான் இந்த உண்ணாநோன்பைத் தொடர்ந்து வட – கிழக்கில் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து முழுக்கடையடைப்பு மற்றும் வேலைநிறுத்தத்தைச் செய்து ஒரு முழுமையான ஹர்த்தாலை அனுஸ்டிக்கும்படி வேண்டுகின்றோம்."

இதேவேளை தமிழ் மக்களுக்கான நீதியையும் இறந்தவர்களையும் அவர்களது உறவுகள் மற்றும் அவர்களது மனநிலையையும் வெளிப்பாட்டையும் அரசு கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்ற வகையில் நாளைய தினம் 28.09.2020 வடக்கு கிழக்கு மாகாணங்கள் தழுவிய பூரண செயற்பாட்டு முடக்கப் போராட்டத்துக்கு கல்விச் செயற்பாடுகள் மற்றும் பரீட்சைகள் முதலியவற்றை புறக்கணித்து யாழ். பல்க லைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியமும் பூரண ஆதரவை வழங்கு வதாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

## ஈழத்தமிழ் மக்களுடன் ஐ. நா. நேரடி உறவுமுறைகளைத் தோற்றுவிக்க வேண்டிய நேரமிது

ஐக்கிய நாடுகள் சபையின் 75ஆவது ஆண்டு நிறைவாண்டாகிய இவ்வாண்டில் சுவிட்சர்லாந்தின் உலக விடயங்கள் மற்றும் அபிவிருத்தி கல்வி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் 600 இளையவர்களிடையே உரையாற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் அன்ரோனியோ குட்டெரெஸ் அவர்கள் "இது ஐக்கிய நாடுகள் சபைக்கும் 'மக்களாகிய நாங்கள்' என்பதில் சுட்டப்பட்டுள்ள மக்களுக்கும் இடையில் புதிய இயங்கியல் தன்மை கொண்ட உறவுகளின் தொடக்கமாக உள்ளது. இந்த உறவுமுறை புதிய பலபக்க தன்மை கொண்டதாக ஐக்கிய நாடுகள் சபை வடிவம் பெறுவதற்கு உதவுமென நம்புகிறேன்" எனத் தெரிவித்தார். அத்துடன் "ஐக்கிய நாடுகள் சபையில் தங்கள் குரல் ஒலிக்க இயலாதுள்ள மக்களின் குரல்களை ஒலிக்க வைக்க வேண்டும்" எனவும் பொதுச் செயலாளர் வலியுறுத்தினார்.

இந்நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபை ஈழத்தமிழ் மக்களுடனும் நேரடியான உறவுமுறைகளை ஆரம்பித்து ஐக்கிய நாடுகள் சபையில் ஒலிக்க இயலாதுள்ள அவர்களின் குரலையும் ஒலிக்க வைக்க வேண்டுமென வற்புறுத்துவதும் அதற்கான கட்டமைப்புக்களை உருவாக்குவதும் உலகிலும் தாயகத்திலும் வாழும் ஈழமக்களின் உரிமையும் கடமையுமாகிறது.

ஒரு நாட்டுக்குள் இருதேசங்கள் என்பதை ஈழத்தமிழ் மக்கள் தங்கள் தேசியப் பிரச்சினையாகக் கொண்டு விளங்குவது போலவே பலஸ்தீனியர்களும் ஒரு நாட்டுக்குள் இரு தேசங்கள் என்ற தேசியப் பிரச்சினையை உடையவர்களாக உள்ளனர். ஐக்கிய நாடுகள் சபை பலஸ்தீனிய மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் அரசாங்க நிலையற்ற சிறப்பு உறுப்பு நிலையை அளித்ததின் பின்னரே அவர்களின் இருப்பு உலகால் தெளிவாக உணரப்பட்டு வருகிறது. இதனை முன்னுதாரணமாகக் கொண்டு ஈழத்தமிழர்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபை சிறப்புரிமை உறுப்புநிலையொன்றைத் தோற்றுவித்தாலே ஈழத்தமிழர்கள் தினம் தினம் தாங்கள் சந்திக்கும் மனித உரிமை மீறல்களையும் இனஅழிப்பு, இனத்துடைப்பு, பண்பாட்டு இனஅழிப்பு என்பவற்றையும் ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துரைக்கும் குரல் வலிமை பெறுவர்.

இதன் அவசியத்தை கடந்த வாரத்திலேயே ஈழத்தமிழ் மக்கள் உணர்ந்தனர். வன்முறையற்ற சனநாயக வழியில் ஈழத்தமிழர்களின் மனித உரிமைகளை மீள்நிறுவுவதற்காக உண்ணாவிரதியாகப் போராடி தன்இன்னுயிரையே ஈகம் செய்த தியாகதீபம் திலீபனின் 33ஆவது நினைவேந்தலை ஈழமக்கள் கொண்டாட அனுமதியாது அவர்களின் ஒன்றுகூடல் மற்றும் கருத்து சுதந்திரங்கள் என்னும் அடிப்படை மனித உரிமைகளையும், உள்ளக தன்னாட்சி உரிமையையும், நீதிமன்ற தடை உத்தரவுகள் மூலமாகவும் ஆயுதப்படைகளின் அழுத்தங்கள் உருவாக்கிய, இனங்காணக் கூடிய அச்சங்களாலும் பறித்தமை கடந்த வாரத்தில் இடம்பெற்றது. இதனை வெளியக தன்னாட்சி உரிமையுடன் ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துரைக்கும் பொறிமுறை இல்லாததினால் தங்கள் வெளியக தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்த இயலாது ஈழத்தமிழர்கள் தவித்தனர்.

அவ்வாறே ஐக்கிய நாடுகள் சபையின் 75வது ஆண்டுத் தொடக்க அமர்வில் உரையாற்றிய குட்டெரெஸ் தெரிவிக்கையில், இலங்கையில் தமிழ்மக்கள் நடாத்திய தங்கள் மேலான சிறீலங்காவின் இனஅழிப்புக்கு எதிரான எதிர்ப்புக்களைப் பயங்கரவாதம் எனவும் பிரிவினை வாதம் எனவும் விபரித்து வரலாற்றுத் திரிபுவாதம் செய்தார். கூடவே உலகெங்கும் பரந்து வாழும் புலம்பெயர் ஈழத்தமிழர்களின் தாயகப் பணிகளை பயங்கரவாதத்தை வளர்க்கும் வலையமைப்புகளாகப் பிரகடனப்படுத்தி உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர் மனித உரிமைகளுக்காக, அமைதிக்காகக் குரல் கொடுக்கும் கருத்துச் சுதந்திரத்தையும் தடைசெய்ய வேண்டும் எனவும் வேண்டுகோள் வைத்தார். இப்படியான நேரங்களில் ஈழமக்களால் சிறீலங்காவால் முன்வைக்கப்படும் போலிக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்க இயலாத நிலை ஐ.நாவில் தொடர்கிறது.

மேலும் நீதி வழங்கல், புனர்வாழ்வு அளித்தல் மூலம், நிலைமாற்று நீதியை நிலைநாட்டல் என்னும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தின் 2015ஆம் ஆண்டு நெறிப்படுத்தல்கள், வழிப்படுத்தல்கள் அனைத்தில் நின்றும் சிறீலங்கா தன்னை விடுவித்து தனது குற்றச் செயல்கள் அனைத்தையும் யுத்த விளைவுகள் என அறிவித்துள்ளது. இத்தகைய அவசர சூழல்களில் அதீத மனிதாய தேவைகள் உள்ளவர்களாக ஈழத்தமிழ் மக்களைக் கருதிச் சிறப்பு உறுப்புப் பொறிமுறை ஒன்றை ஐ.நா. வின் இன்றைய செயலாளர் தோற்றுவிக்க வேண்டுமென ஈழத்திலும், உலகிலும் உள்ள ஈழத்தமிழ் மக்கள் ஒரே அணியில் ஒரே குரலாக வலியுறுத்துவதன் மூலமே ஈழத்தமிழர்களின் மனித உரிமைகள் தினம் தினம் சிறீலங்காவால் அழிக்கப்பட்டு வருவதையும் ஈழத்தமிழர்கள் அதனை மீள நிலைநாட்ட இயலாது தவிப்பதையும் தடுத்து நிறுத்தலாம்.

– ஆசிரியர்



# திலீபனின் கனவுடன் எங்கள் மண் இன்னும்...

### ஏழாம் நாள்.

திலீபன் ஒரு ஆள் உதவி இல்லாமல் சரிந் து படுக்கவோ, நிமிர்ந்து படுக்கவோ எழும்பி இருக் கவோ பலம் அற்றவராக, உயிர்ப்பும் மனவலிமை யும் உள்ளவராக காட்சி தந்தார். ஆறாம் நாள் கிட் டண்ணாவின் அம்மா வந்து சென்ற பின் இன்று என் மனதில் கிட்டண்ணாவும் திலீபனுமாக முன்னெ டுத்த பல நடவடிக்கைகள் மனக்கண் முன் வந்தது. கிட்டண்ணாவும் திலீபனும் யாழ். மாவட்டத்தில் இணைந்து அன்றைய காலத்தில் செய்த இராணுவ அரசியல் பணிகள், யாழ். குடாநாட்டை கட்டுப் பாட்டில் கொண்டு வந்தது மட்டுமன்றி அனைத்து மாவட்டங்களிலும் போராட்டங்கள் தொடர்வதற் கும் வீச்சுடன் வளர்ச்சியடைவதற்கும் வழிசமைத் தது. இறுதியில் இருவருமே இந்திய சதிக்கு பலியா னமையும் அவர்கள் சாவிலும் ஒருவித ஒற்று மையை காட்டி நின்றது.

இன்று காலை யோகி அண்ணா, இந்தியா ரூடே சஞ்சிகை நிருபர், தூர்தர்ஷன் தொலைக் காட்சி நிருபர் படப்பிடிப்பாளருடன் வந்திருந்தனர். இந்திய அதிகாரிகளின் பேச்சுவார்த்தை பற்றிய நிகழ்வுகளை பகிர்ந்தனர். எந்த முன்னேற்றமும் இல்லை என்பது புரிந்தது. பத்திரிகையாளர்களை காணும்போது ஆரம்பத்தில் திலீபன் 'களத்தில்' பத்திரிகையை தொடங்கி தானே எழுதியும் தானே விஜயா அச்சகத்தில் குலம் அண்ணா, குலேந்திரன் அண்ணாக்களுடன் நீண்ட நேரம் செலவழித்து நேர் த்தியாக அச்சிட்டு முதல் பத்திரிகையை கொண்டு வந்து கிட்டண்ணாவிடம் கொடுத்து கலந்துரையாடி மகிழ்ந்ததும், போராளிகள் வீரமரணம் அடையும் போது அவர்கள் படங்களுடன் சுவரொட்டி தயாரி க்க புளொக் செய்வதற்காக தவம் அண்ணா வீட்டில் தவம் கிடந்து அதை செய்வித்து அச்சகம் கொண்டு ஓடி போஸ்டர் அச்சிட்டு குடா நாடு முழுவதும் ஏரியா பொறுப்பாளர்களிடம் கொடுத்து ஒட்ட வைத்ததையும் மீட்டிப் பார்க்கிறேன்.

திலீபன் எல்லோருக்கும் போஸ்டர் அச்சிட் டார். துண்டு பிரசுரம் எழுதினார். பத்திரிகை ஆசிரி யராக இருந்தார். அவருக்கே நாங்கள் இவ்வளவும் செய்யவேண்டிய நிலைமைக்கு ஆளாகப் போகின் றோம் என்று நினைக்கும்போது அந்த உணர்வுகளை வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை.

இந்த வேளையில் குடாநாட்டு பத்திரிகை ஆசிரியர்கள் திலீபனை வந்து பார்த்து சென்றதை நினைக்கும்போது, பத்திரிகையாளர் பங்கு இந்த போராட்டத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய தை யாரும் மறக்க முடியாது. உதயன் பத்திரிகை ஆசிரியர் கானமயில்நாதன், செய்தி ஆசிரியர் வித்தி யாதரன், ஈழமுரசு ஆசிரியர் கோபு ஐயா, செய்தி ஆசிரியர் காக்கா அண்ணா, ராதேயன்அண்ணா, ஈழநாடு மாணிக்கம் அண்ணா, யோகநாதன் அண்ணா, முரசொலி ஆசிரியர் திருச்செல்வம் அண்ணா, செய்தி ஆசிரியர் பிறேம், தட்சணாமூர்த்தி எல்லோரும் தங்கள் கடமைகளை திலீபனோடு சேர்ந்து ஆற்றியவர்கள். இதில் பலபேர் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட போதும் பேனா என்ற ஆயுதத் தால் இன்றும் திலீபனின் நாட்டுப் பற்றிற்காகவும் இனத்தின் உரிமைக்காகவும் பேனா என்ற ஆயுத த்தை பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அன் றைய காலகட் டத்தில் இடம் பெற்ற அவலங்களை உடனுக்குடன் வெளிக் கொணர்ந்த பத்திரிகை பட ப்பிடிப்பாளராக கடமையாற்றியவர்களின் பணிக ளையும் நினைத்து பார்க்கும் போது, எப்படி எல் லாம் கனவுகளுடன் செயற்பட்டோம் ஏன் எங்கள் கனவும் திலீபன் கனவும் இன்று வரை நிறைவே றாது தொடர்கதையாக நீண்டு செல்கிறது?

களத்திலும் புலத்திலும் சூழமைவுக்குஏற்ப நெறிபிறழாத ஊடக தர்மத்தின் பாற்பட்டு துணி ந்து எம் உரிமைக்குரலை உயர்த்தி இம்மக்களு க்கு வழிகாட்டி, உலகத்துக்கு எம் வலியையும் வேதனையையும், மன உறுதியையும், உரிமையை யும் உரக்க உரைக்க வேண்டிய பொறுப்பு எம் ஊட கங்களுக்கு உண்டு. இதன் மூலம் எம் இளைய தலைமுறையை, அடக்கு முறைகளுக்கு எதிராக போராடவும் நீதிக்காக குரல் கொடுக்கவும், உறுதி யுடன் எழுந்துநிற்க கூடிய திலீபன்களாக உருவாக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகிறது.

ராஜன்

### எட்டாவது நாள்

இன்றுடன் எட்டு நாட்கள், 192 மணித்தியால ங்கள் தண்ணீர், உணவு இன்றி படுத்த படுக்கையாக கிடக்கும் காட்சியை பார்க்கும் போது அவரை முதன் முதலில் சந்தித்து உரையாடியது சுபாஸ் வீட்டில், அன்று திலீபன் என்னை அழைத்து சென்று சுபாஸ் வீட்டு தலைவாசலில் இருந்த சாய்மனை கதிரையில் இருந்து செய்யப்படவேண்டிய வேலை களை எப்படி செய்யவேண்டும் என்று சொல்லித் தந்ததும் நினைவில் நிழலாடின.

அந்த நாட்களில் நவாலியில் களைவோடை அம்மன் கோவிலில் இருந்த ஐயாவிடம் கதைத்து விட்டு சாப்பாடும் வேண்டி சாப்பிடுவதும் வழக் கம். இப்படி ஒரு நாள் அங்கிருந்து சைக்கிளில் வெளிக்கிட்டு சிறு கறுப்பு சூட்கேஸ் ஒன்றுடன் வட்டுக்கோட்டை வீதியில் ஏறி நவாலி சேச்சடி என்ற இடத்திற்கு நான், சுபாஸ், நவம், திலீபனுடன் அங்குள்ள நண்பர்களான செல்லக்கிளி, மற்றும் ரவி யை சந்திப்பதற்காக சேச் வாசலில் உள்ள பேருந்து நிலையத்திற்கு சென்று அவர்களுடன் திலீபன் கதை த்துக் கொண்டு நின்றார். எதிர்பாராமல் டேவிற் சனை தேடி சென்ற பொலிஸ் ஜீப் வண்டி ஒழுங்கை யால் கண்ணுக்கெட்டிய தூரத்தில் வந்தது தெரிந்தவு டன் எங்களை மெதுவாக கலைந்து செல்லுமாறு பணித்துவிட்டு தான் பஸ்ஸிற்கு போகும் பயணி மாதிரி நின்று கொண்டார். நானும் சுபாசும் எதிரில் உள்ள ஒழுங்கை ஒன்றில் ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தோம்.

ஜீப் வண்டி சொல்லி வைத்தமாதிரி பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றது. திலீபனிடம் இறங்கி கதைத்து கொண்டு நின்றார்கள். திடீர் என்று திலீபன் சூட்கேஸால் சுழட்டி அடிப்பது தெரிந்தது. தொடர்ந்து துப்பாக்கி சத்தம் கேட்டது. நாங்கள் இருவரும் ஒழுங்கையால் ஓடி விட்டோம். அன்று கண்முன்னால் அந்த அமைதியான திலீபனின் துணிவையும், தந்திரத்தையும் கண்டோம். பொறு மை, செயல்திறன், வீரம், சமயோசித புத்தி என பல திறன்களை ஒருங்கே கொண்ட திலீபன், இன் றைய தினம் தன் இனத்தின் உறுதியை உணர்த்த உணர்விழந்து கிடக்கிறான்.

திலீபனின் திறனோடும், பயிற்சியோடும் வளர்ந்த பலர், 33 ஆண்டுகளின் பின் உலகெங்கும் சிதறி கிடைக்க அவர் கனவும், சொந்த மண் ணும் இன்னமும் அந்த மக்கள் புரட்சிக்காக காத்திரு க்கிறது.

### ஒன்பதாம் நாள்

இன்று ஒன்பதாம் நாள், திலீபனின் கோரிக் கைகளை நிறைவேற்ற இந்திய தூதுவருக்கு கிடை த்த சந்தர்ப்பம். அவரின் அணுகுமுறை, பிடிவாத குணம், ஆணவ இயல்புகளால் அமைதியாக வாழ வேண்டிய இனம் இன்றுவரை அமைதி இழந்து வாழ்கிறது. பாதிக்கப்பட்ட இனத்தின் பக்கம் சார் ந்து முடிவு எடுக்க வேண்டிய ஐந்து அதிகாரிகள் எங்கள் பக்கம் தலைவருடன் சேர்த்து ஐந்து பேர் பேசினார்கள். ஆனால் தூதுவர் டிக்சிற் எழுத்தில் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம் என்று தருவ தற்கு தயாராக இருக்கவில்லை.

வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் பெரும் போராட்டங்களை நடாத்தினார்கள். மன்னாரில் பிற்காலத்தில் மாணவர் அமைப்பிற்கு பொறுப்பா கவிருந்த மரிசால் அப்பாவின் தமயனார் அமைதிப் படையால் மறியல் போராட்டத் தின் போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஒன்பதாம் நாள் இந்திய தூதுவர் டிக்சிற் அவர்களால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை அப் பாவி பொது மகன் கொலையுடன் முடிந்தது. இந்த நாள் வரலாற்றில் மறக்க முடியாத நாள். திரு. டிக்சித் இன்று நேர்மையான முடிவு எடுத்திருந்தால், முள் ளிவாய்க்கால் அவலம் கூட நடந்திருக்காது.

### பத்தாம் நாள்

பத்தாம் நாள் திலீபனை நாங்கள் தான் பார்க்க முடிந்தது. அவரால் எங்களைப் பார்க்க முடி யாத நிலை, நினைக்க முடியாத நிலை. மேடையில் நிற்கவும் வேண்டும். என்ன செய்வது என்று தெரி யாத நிலையில் நின்றவர்களுக்கு தலைசுற்றுகி றதா? தலை இடிக்கிறதா? அல்லது தலையில் யாரும் பாரம் வைத்து விட்டார்களா? மனம் அழுகிறது.

கண்ணீரை காணவில்லை, உறுதியும், இன மான உணர்வும் மட்டுமே எஞ்சியிருக்க, உடல் உணர்வுகளும், செயற்பாடுகளும் மந்தமாகி எம் மில் இருந்து திலீபன் தூரமாகிப் போகிறான் என்ப தும், இந்த தாங்க முடியாத துயரத்தையும், எம் எதிரே தோன்றவுள்ள நெருக்கடிமிக்க போராட்ட நாட் களையும் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

## திலீபனின் கனவுடன் ... தொடர்ச்சி...

பத்தாம் நாள் அங்கு நின்ற இலட்சக்கணக்கான மக்கள் எல்லோரும் இந்திய அரசை நம்பி ஏமாந்து விட்டோம் என்ற உணர்வுடன் குழறி அழுதார்கள். 70 ஆண்டுகளாகியும் சிங்கள ஆட்சியாளர்களுடன் அகிம்சைப் போராட்டம், ஆயுதப் போராட்டம் நடாத்திய போதும் எங்கள் உரிமைகளை நிலைநாட்ட முடியாதது ஏன்? என்ற கேள்வி எழுகிறது.

இந்த போராட்டங்கள் இவ்வளவு காலமும், பெற்ற வெற்றிகள், எம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கை விருத்தி, உலகின் சுயநல போக்குபற்றிய புரிதல், இழந்த உயிர்கள், சொத்துக்கள், புலம்பெயர்ந்த வாழ்வின் இன்பங்கள், துயரங்கள், வளர்ச்சிகள் எல்லாவற்றிக்கும் அடிப்படையாக அமைந்தன.

### பதினொராம் நாள்

இன்று திலீபனின் உண்ணா நோன்பின் 11ம் நாள், அவரின் உடல் முற்றாக செயலிழந்து, இதய துடிப்பும் மூச்சும் பலவீனமாகி அசாதாரண நிலையை எட்டி விட்டது. அவரின் சாவு எப்போதும் நிகழலாம் எனும் நிலை. எம் முன்னே கிடக்கும் தோழனை ஒருசொட்டு நீர் கொடுத்து ஆசுவாசப்படுத்தவோ, எம்மிடம் உள்ள மருத்துவ வளங்களைப் பயன்படுத்தவோ முடியாத திலீபனின் கண்டிப்பான உத்தரவு, போராட்டத்தின் உறுதி, என்றும் எம் உறுதியிலிருந்து விலகக்கூடாது என்ற எம் தலைமையின் வளர்ப்பு என்று பல்வேறு காரணங்கள் எம்மை கட்டிப்போட்டிருந்தன.

தொண்டைமானாற்றில் நடைபெற்ற சண்டையில் திலீபனின் வயிற்றில் வெடிபட்டு யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அவருக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டு, துப்பாக்கி சூட்டு காயத்தால் சிதைவடைந்த சிறுகுடலின் இரண்டு அங்குலம் வரையான சிறு பகுதி அகற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட போது, மூன்றே நாட்களில் மருத்துவ முகாமுக்கு வந்து தொடர் சிகிச்சையும் ஓய்வும் பெற்று சில வாரங்களிலேயே களப்பணிக்கு திரும்பிய தோழன்.

மருத்துவ பிரிவின் வளர்ச்சியை ஏற்படுத்தியவன், மருத்துவ பீடத்தை உதறி தள்ளி போராட்டத்தில் இணைந்தவன். இன்று மருத்துவ வசதிகளை புறக்கணித்து தன் இனமான எழுச்சியின் அடையாளமாய், தமிழன் தன் இனத்திற்காய் எவ்வகையான உச்சம் தொடும் தியாகத்தையும் செய்ய தயங்காதவன் எனும் கருத்தை மெய்ப்பிக்க எம்மை கணங்களை எண்ண வைத்து காலத்தையும், கடவுளையும் சபிக்கவைத்து கண்மூடி கிடக்கிறான்.



திலீபனை மிகவும் உலுப்பிய ஒரு நினைவு என் மனதில் தோன்றுகின்றது அந்நிகழ்வு 1984 நவம்பர் மாதத்தில் நடந்தது. அன்றையதினம் சுழிபுரம் பகுதியில் எமது சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த அரசியல் பிரிவு போராளிகள் ஆறு பேர் புளொட் அமைப்பினரால் சுட்டு கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருந்தனர். அப்புதைகுழியை தோண்டி அவர்களின் உடலை பரிசோதனைக்காக வெளியே எடுத்த போது அந்த உடம்பில் செய்யப்பட்டிருந்த சித்திரவதைகளைப் பார்த்து திலீபன் கண்ணீர் சிந்தியதையும், அதி உச்ச கோபத்தில் கதறியதையும் மறக்க முடியாது.

மக்கள் புரட்சி என்றால் என்ன, அந்தப் புரட்சி எப்படி உருவாகப் போகின்றது. அதற்குரிய காலம் தான் எங்களுக்கு எப்பொழுது பிறக்கப் போகின்றது என்பது எல்லோரின் மனங்களிலும் எழுகின்ற ஒரு கேள்வியாக உள்ளது.

அந்த வகையில், "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்று புதுவை இரத்தினதுரை எழுதிய வரிகளை நாங்கள் எல்லோரும் நிதர்சனமாக்க வேண்டிய ஒரு சூழலில், ஒரு கட்டாயத்தில், புலம்பெயர் தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

### பன்னிரண்டாம் நாள்

இறுதியாக பன்னிரு நாட்கள் பசித்திருந்த எங்கள் உறுதியின் உறைவிடம், தியாக தீபம் திலீபன் இந்திய, இலங்கை கூட்டுச் சதிக்கு எதிராக மக்களை கிளர்ந்தெழ வைத்து இன்று வானகம் சென்றான். இன்றைய தினம் இந்தியாவிலிருந்து நெடுமாறன் ஐயாவும், அவருடன் ஈரோஸ் தலைவர் பாலகுமாரன் அண்ணனும் இரண்டாவது தடவை வந்திருந்தார். எங்கும் ஒருவித நிசப்தம் நிலவியது. எமது மருத்துவ அணி திலீபனின் உயிர் பிரியும் தருணம் நெருங்கி விட்டதற்கான அறிகுறிகள் தென்பட்டபோது அதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் தகுதிவாய்ந்த வைத்தியராக, வைத்திய நிபுணர் சிவகுமார் அவர்களை வேண்டிக் கொண்ட போது அவர் மனமுவந்து முன்வந்து பரிசோதனை செய்து திலீபனின் மரணத்தை 10:48 மணியளவில் அறிவித்து திலீபனின் கால்களில் விழுந்து வணங்கினார். திலீபனின் தந்தையார் ஐயோ என தலையில் கைவைத்து குளறி அழுதது இன்றும் என் மனக் கண்ணில் அழியாத நினைவாக இருந்து வாட்டுகிறது.

இந்நிகழ்வை தொடர்ந்து அங்கிருந்த மக்களும் ஓ..வென அழத்தொடங்கினர். அண்ணா.. அண்ணா... என்று இளையோரும், தம்பி, ராசா, குஞ்சு, அப்பு என்று தம் குடும்ப உயர்வு ஒன்றை பிரிந்த வேதனையில் உறவுமுறை சொல்லி ஈழத்



தமிழினம் மட்டுமல்ல உலகத்தமிழரே அழுத குரல் வானுலகு நோக்கி சென்ற திலீபனை ஒரு முறை திரும்பிப் பார்க்க வைத்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் கண்கள் குருடாக, காதுகள் செவிடாக அதிகார மமதையில் இருந்த இந்திய இலங்கை அரசுகளின் கண்களிலோ காதுகளிலோ எதுவும் ஏறவில்லை. ஏன் இன்றுவரை தமிழ் தேசியம் என்பதன் வரைவிலக்கணம் தெரியாது தமிழருக்காக போராடுவதாக கூறிக் கொண்டு தமிழினத்தின் கருவறுத்த, கருவறுத்துக் கொண்டிருக்கும் கொலைகார போலிகளின் காதில் கூட அன்றும் விழவில்லை. இன்றும் விழவில்லை.

அமைதியாக வாழ விரும்பிய ஈழத்தமிழினத்தின் அமைதியை குலைத்து வந்த இலங்கை அரசும், அமைதி காப்பதாக வந்த இந்திய அரசும் சாத்வீகத்தின்எதிரிகள்என்பதையும், மனிதாபிமானத்தை மறந்தவை என்பதையும் திலீபன் உலகெங்கும் உரக்க உரைத்து விட்டு சென்றிருந்த போதும், எமதமைப்பின் மாபெரும் வெற்றிகளின் போது எம்முடன் உறவாடி எம்மை வீழ்த்தி 2009இன் அவலங்களை தந்த உலக நாடுகளும் அந்த வரிசையில் சேர்ந்து கொண்ட போதும் இவ்வுலகில் மனுநீதி செத்துவிட்ட தென்பது உறுதியாகிய ஓர் நிலையிலே நாம் எமது விடுதலையை நோக்கி பயணிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

திலீபனின் உடல் எடுத்து செல்லப்பட்டு உருமறைப்பு உடை மாற்றப்பட்டு, வீரனாக மக்கள், போராளிகள் இறுதி வணக்கம் செலுத்துவதற்காக நல்லூர் மேடைக்கு கொண்டு வரப்பட்டது. இந்த வேளையிலும் திலீபனின் உடைமைகளானஅந்த வெள்ளை சேட் கறுப்பு நீளக் காற்சட்டை இறுதியாக அவர் பாவித்த பேனா மேடையில் அவர் வாசித்த புத்தகங்கள். அவர் இருந்த கதிரை. கட்டில், அவர் கையில் கட்டிய Q&Q மணிக்கூடு, என்பவற்றை அவரின் ஒரே சொத்தாக இருந்த சிறிய கறுப்பு உடுப்பு பெட்டியில் பாதுகாப்பாக எடுத்து வைத்துக்கொண்டேன். அந்த கறுப்பு உடுப்புபெட்டிக்கு ஓர் வரலாறு உண்டு. அது தலைவர், பாலா அண்ணா, திலீபன் மூவரையும் இந்திய பிரதமரின் அழைப்பின் பேரில் பூரி, குப்தா அழைத்து செல்லப் போவதாகவும் அதில் திலீபனும் வர வேண்டும் என்று தலைவர் கேட்டுக்கொண்டவுடன் அதற்கான ஆயத்தம் செய்வதற்கு வேண்டிய சிறு கறுப்பு உடுப்பு பெட்டி தான் அது (அதனை அந்த காலங்களில் வர்த்தகர்கள் 007 ஜேம்ஸ் பொண்ட் சூட்கேஸ் என்று சொல் வார்கள்). எதையுமே தனக்கென வைத்திருக்காத திலீபன், அன்று அண்ணை சொன்னதும் விழுந்தடி த்து கடைத்தெரு சென்று அந்த உடுப்பு பெட் டியை வாங்கியதும், அதில் சில உடைகளைவைத்து எடுத்து கொண்டு சுதுமலை அம்மன் கோவிலிலடியில் இருந்து ஹெலியில் கையசைத்து சென்றதும் நினைவில்வருகிறது. அவரின்நினைவாகஎம்மிடம் இருந்த மேற் சொன்ன பொருட்களெல்லாம் அந்த கறுப்பு உடுப்பு பெட்டியில் வைத்து பாதுகாப்பாக எடுத்து வை த்தேன். பின்னொரு நாளில் இவை எமது தமிழீழ தேசிய நூதனசாலையில் பார்வைக்கு வைக்க வேண்டும் என்பது என் எண்ணமாக இருந்தது.

எனினும் விரைவிலேயே ஆரம்பிக்கப்பட்ட இந்திய இராணுவ நடவடிக்கை எம்மை தலைமறைவு வாழ்வுக்கு தள்ளிய போதும், திலீபனின் ஆவணங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக் கில் அந்தப் பெட்டியை எடுத்து சென்று புன்னா லைக்கட்டுவனில் உள்ள எமது ஆதரவாளர் ஒருவரின் வீட்டில் பாதுகாப்பாக வைத்தேன். ஆனால் அவர்கள் எமது ஆதரவாளர்கள் என்பதால் தாக்கப்பட்டு, அவ்வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதுடன், அவர்களின் வீடும் தரைமட்டமாக்கப்பட்டது. திலீபனின் நினைவுப் பொருட்களும் எமக்கு கிட்டாமல் போனது.

விடுதலைப்புலிகள் எந்த சூழ்நிலையிலும் இறந்த காலத்தை எண்ணி அழுபவர்களாகவோ மனம் சோர்ந்து படுப்பவர்களாகவோ தலைவராலும், தளபதிகளாலும் வளர்க்கப்படவில்லை. எல்லோரும் சிங்கள இன அழிப்பாளரிடமிருந்து எம் மண்ணை எப்படி விடுவிக்க வேண்டும் என்று சிந்திக்க வளர்க்கப்பட்டவர்கள். எம்மை தன்னுடனேயே கூட்டித் திரிந்து மக்கள் பணி செய்து தன்போல் வரவேண்டும் என்று வளர்த்தெடுத்த ஆயிரக்கணக்கான போராளிகளின் அர்ப்பணிப்பில் அவனது வேணவாவான யாழ். கோட்டையில் எமது கொடி பறக்க வேண்டும் என்பது முதல் மக்களுக்கான பல்வேறு பணிகளை 1990 இன் பின்னர் எம் அமைப்பு செயலுரு கொடுத்து திலீபனின் பல்வேறு கனவுகளை நனவாக்கியது.

திலீபனின் பூதவுடல் நல்லூரில் மக்கள், போராளிகளின் கண்ணீர் அஞ்சலியை தொடர்ந்து திலீபனால் நியமிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பிரசாத்தால் திலீபனின் கால்கள்பட்ட 435 கிராமங்களிற்கும் யாழ். குடாநாடு முழுவதும் மக்கள் மரியாதைசெலுத்துவதற்கு உரிய வகையில் ஒழுங்கு செய்தார். எந்த வீதியால் சென்று வரவேண்டும் என்றவிபரங்களையும் தந்து காசி அண்ணாவையும் என்னையும் அறிவுறுத்தினார் இந்த ஒழுங்கமைப்பிற்குரிய அனைத்து வேலைக ளையும் முழு அரசியற் போராளிகள் பிரசாத் தலைமையில் ஒழு ங்குபடுத்தினார்கள்.

வீதி வீதியாக தீபம் ஏந்தியும் மலர்கள் தூவியும் மக்கள் தங்கள் இறுதி மரியாதை கண்ணீரு டன் செலுத்தினார்கள். 28/9/1987 மதியம் அளவில் சுதுமலை அம்மன் கோவில் மைதா

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# திலீபனுக்காக இணைந்த தமிழ்க் கட்சிகள்;
# ஐக்கியம் தொடரும் வாய்ப்பு உள்ளதா?

**அகிலன்**

திலீபனின் நினைவேந்தல் நிகழ்ச்சிகளுக்கு கோத்தபாய ராஜபக்ஷ அரசாங்கம் விதித்த தடையை தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி இருக்கின்றது. அனைத்துக் கட்சிகளும் இணைந்து திலீபனின் நினைவேந்தலில் அதுவும் - அரசாங்கத்தின் தடைகளை தகர்த்துக் கொண்டு வந்து பங்கு கொண்டது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கின்றது.



தமிழ் அரசியல் பரப்பில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட முக்கியமான ஒரு திருப்பமாக இதனை கருத முடியும். தமிழ் தேசிய அரசியலை முன்னெடுக்கும் இந்த கட்சிகள் அனைத்தும் ஏற்கனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட்ட கட்சிகள் என்பதும் கவனிக்கத்தக்கது. பின்னர் கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளால் பிரிந்து சென்றிருந்த அந்தக் கட்சிகள் தற்போது ஓர் அணியில் இருந்து திலீபனை நினைவு கூர்ந்துள்ளார்கள்.

திலீபனை நினைவு கூர்வதற்கு தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற கோரிக்கையை முதலில் முன்வைத்தவர் மாவை. சேனாதிராஜா என்பதே கவனிக்கத்தக்கது. பொதுத்தேர்தலில் படுதோல்வி அடைந்த மாவை. சேனாதிராஜா தன்னுடைய எதிர்கால அரசியலை கட்டி அமைப்பதற்கு இதனை பயன்படுத்திக் கொள்வார் என்பது உண்மைதான். மாகாணசபைகளுக்கான தேர்தலும் மிக விரைவில் நடை பெறவுள்ள நிலைமையில், மக்கள் மத்தியில் வீழ்ச்சியடைந்திருக்கும் தன்னுடைய செல்வாக்கை உயர்த்திக் கொள்ள வேண்டிய ஒரு தேவை மாவைக்கு ஏற்பட்டிருக்கின்றது.



பொதுத் தேர்தலின்போது தமிழ் கட்சிகள் அனைத்தும் பிளவுபட்டு தனித்தனியாக போட்டியிட்டு வாக்குகளை சிதறடித்த பின்னணியில், தென்னிலங்கைக் கட்சிகள் தமிழ் பகுதிகளில் தமது செல்வாக்கை நிலைநிறுத்த முற்பட்டிருந்ததைக்காண முடிந்தது. இந்த சந்தர்ப்பத்தில்தான் தேசியம்பேசும் தமிழ் கட்சிகள் ஒரே அணியில் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்பதை பலரும் வலியுறுத்தி இருந்தார்கள்.

### அரசின் திட்டம் என்ன?

திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதிப்பது என்ற அரசாங்கத்தின் தீர்மானம் ஒரு ஆரம்பம் என்று தான் கூற வேண்டும். அதனைத் தொடர்ந்து வரப்போகும் மாவீரர் நிகழ்வுகள் உட்பட பல்வேறு நிகழ்வுகளுக்கும் தடை போடுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்வதற்கான ஒரு ஆரம்ப கட்ட செயற்பாடாகவே இது உள்ளது. மாவீரர்களை நினைவு கூருவதன் மூலம் தமிழ் தேசியம் பாதுகாக்கப்பட்டு அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லப்படும் என்பது கோத்தாபய ராஜபக்ஷ அரசின் கருத்து. அதனால்தான் இவர்கள் இவ் விடயத்தில் உறுதியாக நின்றார்கள்.

நீதிமன்றங்கள் மூலமாக தடை விதிக்கப்பட்டு இருந்தாலும் கூட குறிப்பிட்ட பகுதிகளில் இருக்கக்கூடிய பொலிஸ் நிலையங்களே இந்தத் தடைகளை ஏற்படுத்துவதற்கான மனுக்களை தாக்கல் செய்திருந்தன என்பது கவனிக்கத்தக்கது. அதாவது இது வெறுமனே நீதிமன்றச் செயற்பாடு அல்ல. அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலுக்கு உட்பட்டதாகவே காவல்துறையினர் செய்யப்பட்டிருக்கிறார்கள். நீதிமன்றம் அவ்வாறு செய்யப்படும் என்பது அனைவருக்கும் தெரியும். அதிகாரத்திலிருப்பவர்களின் விருப்பங்களுக்கு ஏற்ற வகையில் செயல்படுவது தான் நீதிமன்றங்களின் செயற்பாடாக இலங்கையில் இருக்கின்றது.

### ஒற்றுமை முயற்சி

தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது முன்னெடுக்கப்பட்டு தோல்வி அடைந்தது என்பது அனைவருக்கும் நினைவிருக்கலாம். யாழ். பல்கலைக்கழக மாண



வர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த முயற்சியின் போது அனைத்து தமிழ் கட்சிகளும் அதில் பங்கு கொண்டிருந்தனர் என்பதும், பின்னர் அந்த முயற்சியில் இருந்து அவர்கள் வெளியேறி தனித் தனியான நிலைப்பாடுகள் எடுத்தார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது. குறிப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சஜித் பிரேமதாசவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலை ப்பாட்டை எடுத்தது. ஏனைய சில கட்சிகள் மௌ னமாக இருந்தன.

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் தேசியக் கட்சிகளின் பேரம் பேசும் பலத்தை அதிகரிக்க முடியும் என்ற இலக்குடன் செயற்பட்ட பல்கலைக்கழக மாணவர் சமூகம், அது தோல்வியடைந்த பின்னர் தமது முயற்சிகளை நிறுத்திக் கொண்டது. இந்த தமிழ் கட்சிகளை ஒரே குடையின்கீழ் கொண்டு வருவது சாத்தியமற்றது என்பதை உணர்ந்து கொண்ட நிலைமையிலேயே தனது முயற்சியை அவர்கள் கைவிட்டார்கள்.

ஆனால் இப்போது மாவை சேனாதிராஜா, பொதுத் தேர்தல் தோல்வியின் பின்னர் தன்னுடைய செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்வதற்கு கிடைத்த ஒரு சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்தியுள்ளார்.

இந்த இடத்தில் இன்னொரு விடயமும் கவனிக்கத்தக்கது. கூட்டமைப்பின் பேச்சாளராக இருக்கும் சுமந்திரன் இந்த முயற்சிகளில் இருந்து முற்றுமுழுதாக ஓரங்கட்டப்பட்டு இருந்தார்.

### தோல்வியின் பின் எழுச்சி

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இரண்டு தமிழ்த் தலைவர்களாகக் கருதப்பட்ட அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் படு தோல்வி அடைந்திருந்தார்கள். அமிர்தலிங்கம் அப்போது தமிழரசு கட்சியிலும், சிவசிதம்பரம் தமிழ் காங்கிரஸ் கட்சியிலும் முக்கிய பதவிகளில் இருந்தார்கள். 70களுக்குப் பின்னர் ஏற்பட்ட தீவிர தமிழ் தேசியவாத போக்கும் அவர்கள் தோல்விக்கு



ஒரு காரணமாக இருந்தது. தமது செல்வாக்கை இளைஞர்கள் மத்தியில் வெளிப்படுத்திக் கொள்வதற்காக ஒரு தீவிரமான போக்கில் செயல்பட வேண்டியவர்களாக அவர்கள் இருந்தார்கள். அதே போன்ற ஒரு நிலைமையில் தான் இப்போது மாவை. சேனாதிராஜா இருக்கின்றார்.

தமிழ் தேசியத்தை முன்னெடுக்கும் கட்சிகளைப் பொறுத்தவரையில் ஐக்கியம் என்பதை விட தங்களுடைய தனித்துவத்தைப் பேணிக்கொள்வதும், அதன் மூலமாக மக்கள் செல்வாக்கை வலுப்படுத்திக் கொள்வதும் தான் அவருடைய இலக்காக இருக்கிறது. அதனால் தான் கடந்த காலங்களில் ஒற்றுமை முயற்சிகள் தோல்வியடைந்தன.

### புலிகள் ஏற்படுத்திய ஒற்றுமை

2000ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள் மிக வும் பலமான ஒரு நிலைமையில் இருந்தனர். இருந்தபோதுதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க முடிந்தது. சிதறிப்போய் பல்வேறு கோணங்களில் செயற்பட்ட கட்சிகளை இணைத்து ஒரு பலமான அரசியல் அமைப்பாக அதனை அவர்களால் உருவாக்க முடிந்தது. 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் 22 ஆசனங்களில் பெறக்கூடியதாக இருந்தமைக்கும் அதுதான் காரணம். எதிர்வரும் காலங்களில் அவ்வாறு பாரிய வெற்றி ஒன்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமையில் எந்த ஒரு தமிழ் கட்சியும் இல்லை. அவற்றை ஐக்கியப்படுத்தக் கூடிய நிலைமையில் விடுதலைப் புலிகள் போன்ற பலமான அமைப்பும் இல்லை.

இந்தப் பின்னணியில் திலீபனை முன்னிறுத்தி தமிழ் தேசியக் கட்சிகளிடையே இணக்கப்பாடு இப்போது ஏற்பட்டிருக்கின்றது என்ற போதிலும் கூட இது எந்தளவு காலத்திற்கு நீடிக்கும் என்பது கேள்விக்குறிதான். இந்த ஐக்கியம் திலீபனுடைய நினைவேந்தலுடன் முடிவடைந்துவிடுமா அல்லது பொதுவான விடயங்களிலும் தொடருமா என்பதுதான் கேள்விக்குறியாக இருக்கின்றது.

தேர்தல்அரசியல்என்பதற்குஅப்பால்தமிழ் மக்களுக்கு பெருமளவு பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை. அரசியல் கைதிகள் பிரச்சினை, காணி விடுவிப்பு, இராணுவ பிரசன்னத்தை குறைப்பது, போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவது

தொடர்ச்சி 17ஆம் பக்கம்



**சீ.வீ.கே.சிவஞானம்**

# தமிழ்க் கட்சிகள் பொது விடயங்களில்
## ஒரு மையப் புள்ளியில் இணைவார்கள்

**முன்னாள் மாநகரசபை ஆணையாளரும், வடமாகாண சபைத் தலைவரும், தமிழரசுக் கட்சி உறுப்பினருமான சீ.வீ.கே.சிவஞானம் அவர்கள் 'இலக்கு' ஊடகத்திற்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலை இங்கு தருகின்றோம்.**

**கேள்வி:**

**தியாகதீபம் திலீபன் அவர்களின் நினைவுநிகழ்விற்கு சிறீலங்கா அரசு விதித்துள்ள தடைக்கு எதிராக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் ஒன்றாக இணைந்து கைச்சாத்திட்ட திட்டத்தின் தற்போதைய அரசியல் முக்கியத்துவம் என்ன என நினைக்கிறீர்கள்?**

**பதில்:**

**2 முக்கியத்துவம் உள்ளது.**

1. தியாகதீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தலை நடத்துவதில் தமிழ்த் தேசிய இனம் ஒருமனதாக இருக்கின்றது. உணர்வுபூர்வமாக இருக்கின்றனது என்பது வெளிக் காட்டப்படுகின்றது.

2. எங்களிடையே தமிழ்த் தேசியத்தில் பலத்துடன் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் யாவும் தங்களின் கருத்து வேறுபாடுகளை ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டு, இந்த விடயத்தில் ஒரு புள்ளியில் ஒரு கருத்தோடு நிற்பது என்பது இரண் டாவது.

**கேள்வி:**

**குறித்த தடையை நீக்குவதற்கு சிறீலங்கா அரசு தொடர்ந்தும் மறுத்தால், தமிழ்க் கட்சிகளின் அடுத்தகட்ட நடவடிக்கை எப்படியிருக்கும்?**

**பதில்:**

எப்படியான நடவடிக்கை என்று சொல்ல முடியாது. ஜனநாயக ரீதியான, சாத்வீக ரீதியான அரசியல் நடவடிக்கையாகவே அது இருக்கும். ஆனால் அதை இப்போது சொல்லக் கூடியதாக இல்லை. சிலசமயங்களில் இன்றோ நாளையோ கட்சிகள் கூடி ஒரு முடிவு எடுப்பார்கள்.

**கேள்வி:**

**ஆரம்பத்தில் நாடு கேட்டு, பின்னர் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணம்கேட்டு, ஆட்சி அதிகாரங்கள் கேட்டு, ஒவ்வொரு தடவையும் கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலே அவை நிராகரிக்கப்படுகின்ற தன்மை காணப்படுகின்றது. அந்த வகையில் தமிழ்த் தேசிய அரசியல் தொய்வை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

**பதில்:**

யதார்த்த நிலை அவ்வாறு தான் உள்ளது. நாங்கள் சமஸ்டி நிலையை வலியுறுத்தித்தான் கடந்த 72 வருடங்களாக எங்கள் செயற்பாடுகள் இருந்திருக்கின்றன. அதிலே தொய்வு ஏற்படத் தான் செய்கின்றது. ஆனால் சரியோ பிழையோ தொடர்ந்தும் எமது நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. வழிமுறைகள் மாறியிருக்கின்றன. இந்த வழிமுறைகள் சர்வதேச ரீதியாகவும் அக்கறைகள், பார்வைகளை திருப்பியிருக்கின்றன. ஏதோ ஒரு வகையில் மாற்றங்கள் வரும். தொய்வு ஏற்பட்டதற்காக நாங்கள் எவற்றையும் கைவிட்டு விடுவதற்கோ அல்லது ஏமாந்துபோய் விட்டோமே அல்லது ஏமாற்றப்பட்டு விட்டோமோ என்பதற்காக வாளாதிருக்கும்



நிலைமை இல்லை. இந்த விடயங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். நாங்கள் ஒரு தனித்துவமான இனம், எங்கள் நிலங்கள் இருக்கின்றன. மொழி இருக்கின்றது. உரிமை இருக்கின்றது என்பதால், அது சந்ததிசந்ததியாகத் தொடரும். இது காலப்போக்கிலே என்றாலும் நடைபெறும் என்றுதான் நம்புகின்றேன்.

**கேள்வி:**

**தற்போது இணைந்து செயற்படுவது போல, தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளில் இந்தக் கட்சிகள் தமக்கிடையே ஒரு ஒருங்கிணைவை ஏற்படுத்திக் கொள்வார்களா?**

**பதில்:**

எனது பார்வையில், தமிழ்க் கட்சிகள் பொது விடயங்களில் ஒரு மையப் புள்ளியில் இணை வார்கள் என்றுதான் நம்புகின்றேன். அரசியலில் வேறுபாடுகள் இருந்த போதும், பொது விடயங்களில் அவர்கள் ஒன்றுபடுவார்கள்என்றே நான் நம்புகிறேன்.

**கேள்வி:**

**தியாகதீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தல் தொடர்பாக, புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் உங்களது கருத்துக்களை கூற முடியுமா?**

**பதில்:**

32 வருடங்களுக்குப் பிறகு அரசாங்கம் இப்படியான ஒரு செயற்பாட்டை முன்னெடுத்தது ஆச்சரித்திற்குரியது. ஆனால் இது நாங்கள் எதிர்பார்க்காத ஒன்றல்ல. இந்த அரசாங்கம் பௌத்த சிங்கள ஏகாதிபத்திய சிந்தனையின் அடிப்படையிலேயே இந்த அணுகுமுறை நடை பெறுகிறது. எவ்வாறிருந்தாலும், நாங்கள் அந்த நினைவேந்தலைத் தனித்தோ, கூட்டாகவோ மேற்கொள்வதற்கான வழிமுறைகளைப் பார்க்க வேண்டும். மேலும் அந்த நினைவேந்தலை நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் மனதிலே நிறுத்தி, நாங்கள் செய்யக்கூடிய வகையிலே செய்தல் வேண்டும் என்று நினைக்கிறேன். அதேநேரம் புலம்பெயர் உறவுகளுக்கு எந்தத் தடையும் இல்லை. அவர்கள் ஆங்காங்கே இருக்கக்கூடிய இடங்களில் அந்த நினைவேந்தலை தொடர வேண்டும். இலங்கை அரசாங்கத்திற்கு அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். புலம்பெயர் உறவுகள்அதை தொடர்ந்து செய்வதன் மூலம், இது உலகளாவிய ரீதியான ஒரு செயற்பாடு என்பதை இந்த அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டுவதாக அமையும் என நான் நம்புகின்றேன்.

• • •

### பாதுகாப்பு கெடுபிடி ... தொடர்ச்சி...

கலந்து கொண்டிருந்ததுடன், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், சட்டத்தரணி மணிவண்ணன் மற்றும் புவனேஸ்வரன் ஆகியோர் பங்கெடுத்திருந்தனர்.

இதேவேளை ஆலய வளாகத்தில் அதிகளவான காவல்துறையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், ஆலயத்திற்கு வருகை தரும் பக்கதர்கள் பதிவுசெய்யப்பட்ட பின்னரே உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் ஆலயத்திற்குள் உட்செல்வதற்கான சந்தியில் - ஒழுமடு பிரதான வீதியின் அருகில் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பொங்கல் விழாவிற்கு வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினால் 53 பானைகள் உபயமாக வழங்கப்பட்டதுடன், அன்பாலயா இளைஞர்களால் தண்ணீர் பந்தலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை ஆலயத்தில் தியாகி திலீபனை நினைவுகூர்ந்து தீபம் ஏற்றி நிகழ்வுகள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என வவுனியா நீதிமன்றால் வழங்கப்பட்ட தடை உத்தரவு கோரிக்கை ஒன்றின் பிரதியை நெடுங்கேணி காவல் துறையினர் ஆலயத்தின் நிர்வாகத்தினருக்கு வழங்கியிருந்தமையும் குறிப் பிடத்தக்கது.

### 20 ஆவது திருத்தத்து ... தொடர்ச்சி...

அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிறுபான்மையினருக்கு கிடைக்கப்பெறும் நன்மைகள் தொடர்பில் இதுவரை எந்தவொரு கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

20ஆம் திருத்தச் சட்டமூலத்திற்கு எதிராக இதுவரையில் உயர்நீதிமன்றில் 18 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குறித்த சட்டமூலத்தினை முழுமையாக எதிர்ப்பதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முருகன் வள்ளியை சந்தித்த
## கபிலித்தை என்ற வனம் நோக்கிய பயணம்

இந்த இடத்தினை வைத்து பலர் பணம் சம்பாதிக்க முயல்வர். உண்மையற்ற பல கதைகள் கூறி ஏமாற்றுவார்கள். நாம் தான் கவனமாக இருக்க வேணும்.

இந்த இடத்துக்கு 10 பேர் செல்லணும் என்றால் ஒருவரிடம் 1500 ரூபாய் கொட்டியாகலையில் இருந்து போக்குவரத்துக்கும், 500 ரூபாய் சாப் பாட்டுக்கும் இருந்தால் போதுமாக இருக்கும்.

இந்த புளியமரம் அமைதியாக மக்களை ஈர்த்துக்கொண்டிருக்கிறது என்பதை நேரில் சென்று தான் பார்க்க வேண்டும். அனைத்தையும் இங்கு சொல்லிவிட்டால் அங்கே சென்று மெய்சிலிர்த்து பார்க்க உங்களுக்கு ஒன்றுமிருக்காது.

இந்தமரத்தின்பழமையானசிலையின்கீழே ஓர் பீடக்கல் போன்ற அமைப்பு உள்ளது. இதற்கு பெயர் சத்தியக்கல். என்ன சத்தியக்கல்லா? என நீங்கள் கேட்கலாம்.

அனைத்துமே அங்கு புகைப்படம் எடுத்து கொண்டு இருக்கும் போது "தம்பி அந்த கல்லை மிகஅருகில் Zoom பண்ணி போட்டோ எடுங்க"



என்று கூறிய பின் திருச்செல்வம் ஐயா சொன்னவை தான் இவையெல்லாம்.

ஆதி காலத்தில் இங்கு வாழ்ந்த வேடுவ மக்களது பிரச்சினைகளுக்கு நீதிமன்றமாக இருந்தது இந்த மரத்தடி தான். பிரச்சினைகள் ஏற்படும் போது பிரச்சினைக்குரிய இரு தரப்பினரையும் கூட்டிக் கொண்டு வந்து இந்த சத்தியக்கல்லின் மீது கையை வைத்து அவரவர் தரப்பு நியாயங்களை முருகன் முன்நிலையில் ஒப்புவிப்பர்களாம்.

குற்றம் எந்தப் பக்கம் இருக்கிறதோ அந்த தரப்பினருக்கு அன்று இரவு கடவுளால் தண்டனை வழங்கப்படுமாம். இதனால் அந்த வேடுவக் குடியிருப்பில் குற்றச்செயல்கள் செய்ய அனைவரும் அஞ்சுவார்களாம். அப்படிப்பட்ட பின்னணி கதைகளுடன் தொடர்புபட்டது தான் இந்த சத்தியக்கல்.

ஆனால் சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய அந்த சத்தியக்கல் இன்னும் அங்கு போற்றுதலுக்குரிய ஒரு விடயமாக இருக்கிறது என்பதை இதன் மூலமாக வாசகர்களுக்கு பதிவு செய்கிறேன்.

நல்லா இருட்டி விட்டது என்றாலும் அன்று பௌர்ணமி தினம் என்பதால் நிலா வெளிச்சம் எமக்கு துணையாக இருந்தது. நாங்கள் புளியமரத்தினை சுற்றி கும்பிட்டு விட்டு வரும் போது தான் எங்களோடு வந்த சிலர் ஓட்டமும்நடை



யுமாக புளியமரம் இருந்த பக்கம் வந்தர்கள். ஏன் தாமதம் என நாம் வினவ..

யானை எங்களை எல்லாம் தடுத்து வைத்து விட்டது ஐயா..! இப்ப தான் விடுவித்தது என்று கூறிக்கொண்டே நடந்தார்கள்..

யாரை விடணும், யாரை விடக்கூடாது என காவலருக்கும் தெரிந்திருக்கும் போல.. எங்கள்

**மட்டுநகர் திவா**

கூட்டத்தில் என்னைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் பக்தர்கள், என்னை எப்படி காவலர் முதல் தடவையிலேயே உள்ளே செல்ல அனுமதி தந்தார் என இன்னும் ஆச்சரியமாகவே இருக்கிறது..

மீண்டும் ஒரு மாதிரியாக ஏற்கனவே பிரசாதம் வைத்து கும்பிட்ட இடத்துக்கு வந்து பார்க்கிறோம் சட்டி நிறைய வைத்திருந்த அவலை காணவில்லை. சட்டியும் ஒரு பக்கம் விழுந்து கிடந்தது. நடந்ததை புரிந்து கொள்ள நிறைய நேரம் எடுக்கவில்லை. காவலுக்கு நின்ற யானை தான் அதனை சாப்பிட்டு விட்டது.

கடவுளுக்கு பிரசாதம் எனும் பெயரில் எமக்கு விரும்பியதை படைத்து விட்டு நாமே அதை எடுத்து மீண்டும் சாப்பிட்டு விடுவோம். அதே நிலமை தான் இங்கும் இருக்கும் என எதிர்பார்த்தேன்.. பிறகென்ன பிள்ளையார் யானை உருவத்தில் வந்து பிரசாதத்தினை ஏற்றுக்கொண்டார் என சொல்லிக்கொண்டே பாதுகாப்பாக எம்மை கூடிக் கொண்டு சென்று திரும்ப கொண்டுவந்து விட்ட அதிகாரிக்கு நன்றி கூறிவிட்டு குமுக்கன் ஆற்றை கடக்க தயாரானோம்.

எப்படியோ வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் உதவியால் உள்ளே சென்று பார்த்து விட்டு திரும்பி விட்டோம். ஆற்றை கடந்து வந்த களைப்பு நீங்க எங்கேயாவது உறங்குவோம் என கொண்டு வந்த படங்கு ஒன்றை விரிக்கும் போது ஒரு சத்தம் கேட்கிறது. இரவு சாப்பாட்டுக்கு பாண், வாழைப்பழம், சீனிச்சம்பல் மற்றும் ஜாம் என்பன இருக்கிறது. அனைவரும் சாப்பிட தயாராகினர்.

ஏற்கனவே சோறு சமைத்துச் சாப்பிடுவது தான் திட்டம். பிறகு இந்த இருட்டுக்குள் எங்கு சென்று விறகு தேடுவது.. அத்தோடு சமைத்து முடியவும் நேரம் எடுக்கும். அனைவருக்கும் களைப்பும் பசியுமாக இருக்குது. பாணையே சாப்பிடுவோம் என முடிவெடுக்கப்பட்டது.

கொண்டு வந்த 12 இறாத்தல் பாணையும் அனைவரும் பகிர்ந்து சாப்பிட்டு விட்டு காலை 4 மணிக்குள் எழும்பி பொங்கல் வைக்க தயாராக வேண்டும் என கூறியபடியே சாப்பிட விரித்த படங்கை சற்று விரித்து போட்டோம்.

19 பேரும் நித்திரை கொள்ள கொண்டுவந்த படங்கு போதவில்லை அதனால் சிலர் உளவு இயந்திர பெட்டியினுள்ளும் சிலர் விரித்த படங்கிலும் படுத்துக் கொண்டோம்.

அருகில் கபிலத்தை காவல் தெய்வமான வீரபாகு தேவருக்கு பூசை ஆரம்பிக்கின்றது. நேரம் இரவு 9.30 மணியை கடந்திருக்கும். எம்மைப்போல பக்தர்கள் பலர் கூடாரம் அடித்து எமக்கு அருகில் தங்கியிருந்தனர்.

உளவு இயந்திர பெட்டியில் நாளை அபிஷேகத்திற்காக நாம் கொண்டு வந்த பழங்களின் வாசனை எமக்கு மூக்கை துளைத்தது. காட்டு மிருகங்களின் நுகர்வு திறன் மனிதரை விட பல மடங்கு மேலானது. அதிலும் யானையின் மோப்ப சக்தி பற்றி நான் சொல்லத் தேவையில்லை. நடப்பது நடக்கட்டும். நான் படுக்கிறேன் என சொல்லிக் கொண்டு முகத்தினை வேட்டியால் மூடிக்கொண்டு படுக்கிறேன். அருகில் குகன் டாக்டர் கந்த சஷ்டி கவசம் படித்துக் கொண்டிருக்கிறார், மற்றப்பக்கம் காரைதீவு கோகுலரஞ்சன் அண்ணா அரைகுறை நித்திரையில் தூங்கிக் கொண்டிருக்கிறார்.

ஏதும் நடந்தால் இவர்கள் நம்மை எழுப்புவார்கள் என்ற நம்பிக்கையோடு நானும் கண்ணை மூடி தூங்கினேன். கண்ணை மூடியதும் கந்தசஷ்டி கவசமும் மற்றப் பக்கம் வீரவாகு தேவருக்கு நடக்கும் பூஜையின் சத்தமும் தான் கேட்டுக்கொண்டிருந்தது.

வீரவாகு தேவருக்கு சிங்களத்திலேயே பூஜைகள்நடைபெறும். இதற்காகபூசாரிகள்அருகில் இருக்கும் ஊரான கொட்டியாகலையிலிருந்தே வருவிக்கப்படுகிறார்கள்.

காவியம் போன்ற ஒன்றை அண்ணளவாக ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அந்த பூசாரி சிங்களத்தில் பாடிக் கொண்டிருக்கிறார். கொஞ்ச நேரத்தில் அவருக்கு உருவேறுகிறது. அவர் நன்றாக தலைமுடி வளர்த்திருந்தார். தற் போது உருவேறியதும். தலையை சுழற்றிக் கொண்டே சிங்கள காவியத்தை உச்சரித்துக் கொண்டிருக்கிறார்..



அரண்ட நித்திரையில் நடப்பதை நாமும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த நேரம் ஆற்றங்கரையை நோக்கி சிலர் டோர்ச் வெளிச்சத்தை அடிப்பதை காணக்கூடியதாக இருந்தது. இந்த நேரத்தில் யாருடா வெளிச்சம் அடிச்சு விளையாடுகிறது.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# சாத்வீகப் போராட்டம் பயங்கரவாதம் ஆகுமா?



ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும். பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கறக்க வேண்டும் என்று சொல்வார்கள். தன்மைகளுக்கும், நிலைமைகளுக்கும் ஏற்ற வகையில் பிரச்சினைகளைக் கையாள்வதிலும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் இந்த அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டியது அவசியம். அரசியலைப் பொறுத்தமட்டில் இந்த உத்தி மிகமிக முக்கியமானதாகும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான போராட்டம் பல தசாப்தங்களாகத் தொடர்கின்றது. போராட்டங்களில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டிருக்கின்றன. பேச்சுவார்த்தைகள் மூலமாக அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகள் தோற்றுப்போயிருக்கின்றன.

முதலில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. பலன் கிடைக்கவில்லை. சாத்வீகப் போராட்டம் நடத்தப்பட்டது. அது தோல்வியைத் தழுவியது. சாத்வீகப் போராட்டத்தில் நம்பிக்கை இழப்பதற்கு அரச அடக்குமுறையும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த கடினப்போக்கும் காரணமாகின. இதனால் ஆயுதப் போராட்டம் தலைதூக்கியது.

ஆயுதப் போராட்டம் இரு நாடுகளுக்கிடையிலான பெரும் யுத்தமாக மாறியது. யுத்த நிலைமைகள் நாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. ஆயினும் அந்தப் பாதிப்புகளைத் தடுத்து நிறுத்தி நாட்டில் நிரந்தரமான அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு இருதரப்பிலும் விட்டுக்கொடுப்புடனான அணுகுமுறைகள் கையாளப்படவில்லை.

இதற்கான முன் முயற்சிகள் அரச தரப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை இனப்பிரச்சினையாகப் பரிமாணம் பெற்று அரச தரப்பினாலேயே இழுத்தடிப்பு செய்யப்பட்டு வந்துள்ளது. ஆனால் அது மேற்கொள்ளப்படவில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் மக்களுக்கு பொறுப்பு கூறுகின்ற கடப்பாட்டைக் கொண்டுள்ள நிலையில், உரிய கடப்பாட்டுடன் அது செயற்படத் தவறியது. இறுக்கமான நடைமுறைகளின் மூலம் ஆயுதப் போராட்டத்தை



மிகத் தீவிரமாக முன்னெடுத்திருந்த விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதிலேயே கவனம் செலுத்தியது. அரசியல் ரீதியான அணுகுமுறைகளைக் கையாண்டு, நீதியானதோர் அரசியல் தீர்வை முன்வைத்து அவர்களைச்செயலிழக்கவைப்பதற்கு அரச தரப்பினரால் முடியாமல் போனது. இந்த அரசியல் தந்திரோபாயத்தைப் பயன்படுத்துவதற்குப் பேரின அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளும் முன்வரவே இல்லை. அந்த அணுகுமுறையைக் கையாள்வதற்கு அவர்கள் தவறி விட்டார்கள்.

அவர்களின் கடும்போக்கும், விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகச் சித்தரித்தமையும், சிறுபான்மை இன மக்களை இந்த நாட்டின் தேசிய இனமாக அங்கீகரிக்க மறுத்தமையும் மோசமான யுத்த அழிவுகளுக்கே வழிசமைத்திருந்தன. பயங்கரவாதத்தை இல்லாமல் செய்வதாக சர்வதேசத்திற்குப் போக்குக் காட்டி இந்தியா, சீனா, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வ தேச நாடுகளின் உதவிகளைப் பெற்று, விடுதலைப்புலிகளை ஆயுத வழியில் தோற்கடித்து 2009 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ அரசு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

**பி.மாணிக்கவாசகம்**

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த தன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான ஆயுதப் போராட்டம் இல்லாமல் செய்யப்பட்டதே யொழிய யுத்தம் மூள்வதற்கு மூல காரணமாகிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. அரசியல் தீர்வு காண் பதற்கு அந்த அரசு முற்படவில்லை. இந்தியாவின் அழுத்தம் காரணமாக யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட சமாதான பேச்சு வார்த்தைகளையும் அரசாங்கமே ஒருதலைப்பட்சமாக முறியடித்தது.

சிறுபான்மை தேசிய இனத்தவராகிய தமிழ் மக்களை இன ரீதியாக அடக்கி ஒடுக்கி அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக வைத்திருப்பதிலேயே ஆட்சியாளர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டனர். செயற்பட்டும் வருகின்றனர்.

ஒற்றையாட்சி என்ற அச்சாணியில் சிங்கள பௌத்த தேசியத்தை முழுமையாக நிலைநாட்டுவதிலேயே மாறிமாறி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற பேரின அரசியல் தலைவர்களும், அரசியல்வாதிகளும் கவனம் செலுத்தி வருகின்றனர். பல மதங்களைப் பின்பற்றுகின்ற பல்லின மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் பன்மைத்தன்மையைக் கொண்டதோர் ஆட்சி முறையை உருவாக்க அவர்கள் விரும்பவில்லை.

பன்மைத்தன்மைக்கு இடமளித்தால்நாடு இரண்டாகப் பிளவுபடும். சிங்கள பௌத்த தேசியத்திற்கு இடமில்லாமல் போகும். சிங்கள மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற போலி அரசியல் பிரசாரத்திலேயே அவர்களின் அரசியல் செயற்பாடுகள் மையம் கொண்டிருக்கின்றன. இதற்கு அடிநாதமாக சிங்கள பௌத்த தேசியக் கொள்கையை அவர்கள் கைக்கொண்டிருக்கின்றார்கள். இதனால்நாட்டில்இனவாதத்தைஅடிப்படையாகக் கொண்ட அரசியல் வழிமுறையே இந்த நாட்டின் அரசியல் வழித்தடமாக மாறியிருக்கின்றது.

இந்த இனவாத அரசியல் நெறிமுறையின் அப்பட்டமான விளைவை 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலும் அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற 2020 பொதுத் தேர்தலும் இந்த கடும் போக்கு அரசியல் செயற்பாடுகளில் ராஜபக்ஷ குடும்பத்தினரான அரசியல் தலைவர்களும், அரசியல்வாதிகளுமே முன்னணியில் திகழ்கின்றனர். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த அவர்கள் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து நாட்டை விடுவித்து உண்மையான சுதந்திரத்தை சிங்கள மக்களுக்குப் பெற்றுக்கொடுத்ததாகப் பிரசாரம் செய்து அதனையே தமது அரசியல் முன்னேற்றத்திற்கான முதலீடாகப் பயன்படுத் தினர்.

அந்த அரசியல் போக்கின் தொடர்ச்சியிலேயே ஐந்து ஆண்டுகளின் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்திடம் இருந்து ஆட்சி அதிகாரத்தை ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் ஊடாகக் கைப்பற்றி 2020 இல் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்ட முழுமையான ஆட்சி ஒன்றை அவர்கள் அமைத்திருக்கின்றனர்.



ஆயுத ரீதியில் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து 11 வருடங்கள் கழிந்த பின்னரும், புலம்பெயர் தேசங்களில் விடுதலைப்புலிகள் நிலைகொண்டிருப்பதாகவும், அவர்கள் மீண்டும் நாட்டில் காலூன்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரங்களை மேற்கொண்டு தென்னிலங்கை அரசியல் வெளியில் 'புலிப்பயப் பிராந்தியை' ஏற்படுத்தி இருக்கின்றனர். அதன் அடிப்படையில்தான் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வதையும், போராளிகளான மறைந்த விடுதலைப்புலிகளை நினைவு கூர்வதையும் அவர்கள் தடுத்து வருகின்ற னர்.

அந்த வகையில் தியாகதீபம் என தமிழ் மக்களால் போற்றப்படுகின்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி தனது உயிரை ஈர்ந்த திலீபனை நினைவுகூர்வதற்கும் இப்போது தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.

தடைசெய்யப்பட்ட இயக்கமாகிய விடுதலைப்புலிகள்அமைப்பின் முக்கிய உறுப்பினராகிய திலீபனை நினைவுகூர்வது பயங்கரவாதி ஒருவரை நினைவுகூர்வதாகவும், அது பயங்கரவாதத்தை மீண்டும் தோற்றுவிக்கவும், அமைதியின்மையை ஏற்படுத்தவும் வழிவகுக்கும் என்ற காரணத்தைக் காட்டி சட்ட ரீதியாக நீதிமன்றத்தில் பொலிசார் தடையுத்தரவைப் பெற்றுள்ளனர்.



தமிழ் அரசியல் கைதிகள விடுதலை செய்ய வேண்டும். இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள பொதுமக்களின் காணிகள், பொதுக் கட்டிடங்கள் பாடசாலைகள் என்பவற்றில் இருந்து அவர்கள் வெளியேற வேண்டும். தமிழ்ப் பிரதேசங்களில் வலிந்து மேற்கொள்ளப்படுகின்ற சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை இந்திய அரசிடம் முன்வைத்து திலீபன் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

நீர்கூட அருந்தாமல் இரண்டு வாரங்கள்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## சாத்வீகப் போராட்டம் ... தொடர்ச்சி...

போராடிய திலீபன் தியாக தீபமாகத் தன்னை அர்ப்பணம் செய்தார். அவருடைய கோரிக்கைகளை ஏற்க இந்திய அரசு மறுத்து விட்டது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அரச படைகளுடனான தமிழ் இளைஞர்களின் ஆயுத மோதல்கள் நிறுத்தப்பட்டு, ஆயுதக் கையளிப்பு நடைபெற்று, போராளிகளுக்கு இலங்கை அரசு பொது மன்னிப்பு வழங்கி இருந்த தருணத்திலேயே திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் இடம் பெற்றிருந்தது.

இதனால் திலீபன் உண்ணநோன்பிருந்த போது யுத்த மோதல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. அந்த வகையில் அரசாங்கம் குறிப்பிடுகின்ற பயங்கரவாதம் இருக்கவில்லை. மாறாக ஆயுதப் போராட்டத்திற்குக் காரணமாகிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் அரசியல் தீர்வு காணுகின்ற ஒரு நடவடிக்கையாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மாகாணசபை ஆட்சி முறைமைக்கு வழிகோலப்பட்டிருந்தது.

அதனடிப்படையில்திலீபன்முன்வைத்திருந்த கோரிக்கைகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் சாரம்சத்தையும் அதன் நிறைவேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்ததே தவிர ஆயுதப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. பயங்கரவாதத்தை அது எந்த வகையிலும் பிரதிபலிக்கவில்லை.

நாட்டைப் பிளவுபடுத்த வேண்டும். தனி நாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று திலீபன் கோரவில்லை. சிங்களப் பேரினவாதிகளுக்கு அரசியல் ரீதியாக வயிற்றைக் கலக்குகின்ற ஈழம் என்ற சொல்லும் அங்கு பயன்படுத்தப்படவில்லை. ஈழம் வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை.

உலகின் அஹிம்சா மூர்த்தி என்றழைக்கப்படுகின்ற மகாத்மா காந்தி பிரித்தானிய சாம்ராச்சியத்தை மண்டியிட வைப்பதற்காகப் பயன்படுத்திய சாத்வீகப் போராட்டமாகிய உண்ணாவிரதப் போராட்டத்தையே திலீபன் மேற் கொண்டிருந்தார்.

தியாகி திலீபனை நினைவுகூர்வது தடை செய்யப்பட வேண்டும் என்ற பொலிசாரின் கோரிக்கையில் திலீபனுடைய வாழ்க்கை வரலாற்றையே அவர் ஒரு பயங்கரவாதி என்பதற்கான சான்றாதாரமாக பொலிசார் முன்வைத்திருக்கின்றனர். ஆனால் திலீபனுடைய போராட்டத்தின் அடிப்படை நிலைமைகள், அவர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய காலச் சூழல் அரசியல் களநிலைமைகள் என்பவற்றைக் கவனத்திற் கொள்ள பொலிசார் தவறிவிட்டார்கள்.

பொலிசார் தமது வாதத்திற்காகப் பல காரணங்களைக் கூறினாலும்கூட சாத்வீகப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று கணிக்க முடியாது. அஹிம்சை வழியில் போராட்டம் நடத்தி தனது கோரிக்கைகள் கடும்போக்கு கொண்ட ஆட்சியாளர்களினால் நிறைவேற்றப்படாத நிலையில் தனது உயிரையே அர்ப்பணித்த அவரை நினைவுகூர்வதன் மூலம் பயங்கரவாதம் உருவாகி விடும் என்று கூறுவதும் ஏற்புடையதல்ல.

ஒருஜனநாயகநாட்டில்அஹிம்சைவழியில் போராடிய ஒரு தியாகியை நினைவுகூர்வதைத் தடுப்பதென்பதை நியாயமான ஒரு செயற்பாடாக ஏற்றுக்கொள்ள முடியாது. அது ஜனநாயகத்திற்கும், ஜனநாயக விழுமியங்களுக்கும் முரணானதாகவே அமையும்.

இத்தகைய நிலையில் தியாகி திலீபனை நினைவுகூர்வதைத் தடுப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவை விலக்கிக் கொள்ளக்கோரி ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷவுக்குக் கடிதம் அனுப்புவதற்காக தமிழ்த்தேசிய கட்சிகள் ஒன்றிணைந்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு நடவடிக்கையாகும். ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதுவதுடன் நிற்காமல் திலீபனை நினைவு கூர்கின்ற உரிமையை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கும் தமிழ்த்தேசிய கட்சிகள் ஒன்றிணைந்திருப்பதும் வரவேற் கத்தக்கது.

ஆனாலும் தமிழ் அரசியல் கட்சிகளின் வழமையான அரசியல்பாணியாகிய அறிக்கை வெளியிடு



வதும் காரசாரமான கருத்துக்களை வெளியிடுவதுடன் நின்றுவிடுவதை அடியொட்டியதாகவே இந்த ஒன்றிணைவும் மேலோட்டமான பார்வையில் தெரிகின்றது.

திலீபனுடைய தியாகம் போற்றப்பட வேண்டியது. அந்த போற்றுதலைத் தடை செய்வதற்கான உத்தரவை எதிர்த்துப் போராட வேண்டியதும் அவசியமானதே. ஆனால் கடும் போக்கைக் கொண்டுள்ள அரசாங்கத்திடம் நியாயம் கேட்பதற்கு உரிய வழிமுறைகள் கையாளப்பட வேண்டியது அவசியம். கடிதம் மூலமான கோரிக்கைகளுக்கு மதிப்பளித்துச் செயற்படுகின்ற அரசாங்கம் ஆட்சியில் இல்லை என்பதை மறந்துவிடக் கூடாது.

சட்டரீதியாகத் தடையுத்தரவைப் பிறப்பித்து இறந்தவர்களையும் தியாகிகளையும் நினைவு கூர்வதைத் தடை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இந்தத் தடை உத்தரவும் பொதுவான தடை உத்தரவல்ல. யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 20 பேருக்கும் வேறு இடங்களில் பெயர் குறிப்பிட்டு சுட்டிக்காட்டப்பட்டிருப்பவர்களுக்குமே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

அப்படியென்றால் தடை உத்தரவு பிறப்பிக்கப்படாத இடங்களில் திலீபனை நினைவு கூரலாம் அல்லவா? பெயர் குறிப்பிட்டு அறிவிக் கப்பட்டவர்கள் தவிர்ந்த எவரும் திலீபனை நினைவுகூர முடியும்தானே?

தடை உத்தரவை விலக்கி தியாகி திலீபனை நினைவுகூர்வதற்கு அனுமதிக்குமாறு கோரி கடிதம் எழுதுவதற்கு ஒன்றுகூடிய தமிழ்த்தேசிய கட்சிகளின் தலைவர்களும், முக்கியஸ்தர்களும் இந்த விடயங்கள் குறித்து சிந்தித்தார்களா அல்லது கூடிப் பேசினார்களா என்பது தெரியவில்லை.

ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷவின் அரசியல் ரீதியான தீர்மானத்திற்கு அமைவாகவே பொலிசார் நீதிமன்றத்தில் நினைவுகூர்வதற்கு எதிரான தடை உத்தரவைப் பெற்றுள்ளார்கள் என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அதே வேளை, அந்த அரசியல் தீர்மானத்தை மாற்றுவதன் ஊடாக தடை உத்தரவை நீக்க முடியும் என்ற அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

அரசாங்கத்தின் அரசியல் ரீதியான ஒரு தீர்மானத்தின் ஊடாக நீதிமன்றத் தடை உத்தரவு பெறப்பட்டிருக்கலாம். அத்தகைய தடை உத்தரவை அதே நீதிமன்றத்தில் சட்டரீதியான காரணங்களையும் வலுவான வாதங்களையும் முன்வைத்து ஏன் எதிர்கொள்ளக் கூடாது? அவ்வாறு செய்வதன் மூலம் அந்தத் தடை உத்தரவை எதிர் கொள்ளலாம் அல்லவா?

தியாகி திலீபனுடைய நினைவேந்தல் விவகாரம் தொடர்பில் தமிழ்த்தேசிய கட்சிகள் ஒன்றிணைந்திருப்பது பாராட்டுக்கு உரியது. ஆனால் இந்த ஒன்றிணைவு வெறுமனே உட்கட்சி அரசியல் விருப்பு வெறுப்புகளுக்குக் களம் அமைப்பதாக அமைந்துவிடக் கூடாது. அரசியல் ரீதியாக இந்த விடயத்தை எதிர்கொள்கின்ற அதேவேளை, சட்டரீதியான வழிமுறைகளிலும் இதனைக் கையாள முயற்சிக்க வேண்டும்.

அதேவேளை ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள காலக்கெடுவுக்குப் பின்னர் என்ன செய்வது எவ்வாறு போராட்டத்தை நகர்த்திச் செல்வது என்பது பற்றிய அரசியல் வழித்தடம் குறித்து சிந்திக்கப்பட்டிருக்கின்றதா என்பது தெரியவில்லை. மொத்தத்தில் தியாகி திலீபனுடைய நினைவேந்தலைத் தடுப்பதற்கான தடை உத்தரவை எதிர்த்துப் போராடுவதற்கும் அப்பால் பல பிரச்சினைகளுக்கும் பல விடயங்களுக்கும் தீர்வு காண்பதற்காகப் போராட வேண்டிய பொறுப்பு இப்போது ஒன்றிணைந்துள்ள தமிழ்த்தேசிய கட்சிகளைச் சார்ந்திருக்கின்றது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை மிகத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளார்கள். இன்னும் கூறப்போனால், தமிழ் அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகளுக்கு இந்தத் தேர்தல் மிகக் கசப்பான பாடம் ஒன்றைப் போதித்திருக்கின்றது. அந்த படிப் பினையின் அடிப்படையில் தங்களுடைய கட்சி அரசியல் நலன்கள், தனிப்பட்ட அரசியல் நிலைமைகள் என்பவற்றைப் புறந்தள்ளி தமிழ் மக்களின் நலன்களையும் தமிழ் அரசியலின் எதிர்காலத்தையும் கருத்திற் கொண்டு இந்தக் கட்சிகள் தமது ஒன்றிணைவை மேலும் பலப்படுத்த வேண்டும். அதனை நிரந்தரமான ஒன்றிணைவாக மாற்ற வேண்டும்.

அத்துடன் தமிழ் மக்களின் முன்னால் உள்ள பிரச்சினைகளை காய்தல் உவத்தலின்றியும், அரசியல் நலன்களைக் கடந்த நிலையிலும் சீர்தூக்கி சிந்தனைக்கு உட்படுத்தி செயலாற்ற முன்வர வேண்டும். தமிழ் அரசியல் தலைவர்களும், அரசியல்வாதிகளும் ஒரே கொள்கைகளையும் ஒரே குறிக்கோளையும் கொண்டிருக்கின்ற போதிலும், அவர்களின் அரசியல் கட்சி நிலைப்பாட்டினதும், தனிப்பட்ட அரசியல் நிலைப்பாட்டினதும் இருப்பை மையமாகக் கொண்ட அரசியல் ஈகோ அவர்களை ஒன்றிணைந்து அர்த்தமுள்ள வகையில் செயற்படுவதற்குத் தடையாக அமைந்துள்ளது.

இந்த அகநிலைத் தடைகளைக் கடந்து பிரச்சினைகளின் தன்மைகளையும் அவற்றை அரசதரப்பினர் கையாள்கின்ற வழிமுறைகளையும் சீர்தூக்கிச் சிந்தித்து அதற்கேற்ற வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபட முன்வர வேண்டும். பொதுத்தேர்தலில் பெற்றுள்ள கசப்பான அனுபவத்திற்குப் பின்னர் எதிர்கொள்ளவுள்ள மாகாண சபைக்கான தேர்தலை மனதில் நிறுத்திச் செயற்படுவதற்கு முனைய வேண்டும். இது இன்றைய அரசியல் களநிலையில் காலத்தின் தேவையாகும்.

• • •

## முருகன் வள்ளி ... தொடர்ச்சி...

யானை வருகிறதோ என நக்கலாக கதைத்துக் கொண்டே தலைமாட்டில் இருந்த டோர்ச் லைட்டை எடுத்து நாமும் அடித்து பார்க் கும் போது தான் தெரிந்தது; உண்மையிலேயே யானை ஒன்று குமுக் கன் கரையில் நீர் அருந்திக் கொண்டிருக்கிறது.

அதனை டோர்ச் அடித்து தொல்லை பண்ண வேண்டாம் என அனைவருக்கும் எச்சரிக்கப்பட்டது. அத்துடன் நாமும் டோர்ச் அடிப்பதை நிறுத்திவிட்டு, நிலவொளியில் தெரியும் அசைவை மட்டும் மறு கரையில் இருந்து அவ தானித்துக் கொண்டிருந்தோம்.

அனைவரது கவனமும் ஆற்றில் நிற்கும் யானையை நோக்கியபடியே இருந்தது. இங்கே இந்தச் சம்பவம் நடக்கும்போது இதற்கு சமாந்தரமான நேரத்தில் பத்தினி அம்மன் கோவில் அருகே உள்ள வழியால் வந்த பெரிய காட்டுப் பன்றி ஒன்று எமக்கு பின்னால் சத்தமின்றி வந்து நின்றது. உழவு இயந்திர சாரதிகளும் பக்தர்கள் சிலருமாக இணைந்து பன்றியை வேறு திசைக்கு விரட்டி விட்டனர். எனினும் வேறு ஏதும் மிருகங்களின் தொல்லை ஏற்படலாம் என்பதால் வந்திருந்த சாரதிகள் அனைவரும் இணைந்து இரவு தூங்காமல் காவலுக்கு இருந்தனர்.

தொடரும்...........

# கிழக்கு மாகாணத்தில் தீவிரப்படுத்தப்படும் தொல்லியல் செயற்பாடுகள்

வடகிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற நாமம் இன்று உலகளவில் உச்சரிக்கப்பட்டு வருகின்றது. சர்வதேச மயப்படுத்தப்பட்ட போராட்டம் என்ற காரணத்தினால் தமிழர்களின் தாயகப் பகுதியை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டிய நிலை உருவாகி வருகின்றது.

இந்த நிலையில், வடகிழக்கு தமிழர்களின் தாயகம் இல்லை என்பதை நிறுவும் தீவிர முயற்சியில் பௌத்த பேரினவாதம் அரசாங்கத்தின் முழுமையான ஆதரவுடன் ஈடுபட்டு வருகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தினை தமிழர்களின் தாயகம் என்ற உச்சரிப்பில் இருந்து முற்றாக நீக்கும் நடவடிக்கையினை புதிய அரசாங்கம் மிகவும் திட்டம் போட்டு முன்னெடுத்து வருகின்றது.

புதிய அரசாங்கம் பதவியேற்ற காலம் தொடக்கம் வடகிழக்கில் எந்தவித வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்காது, கிழக்கு தொல்பொருள் செயலணியொன்றை உருவாக்கி அதனை வழி நடத்துவதற்கு பௌத்த மதகுருமாரையும் நியமித்திருந்தனர்.

இது தொடர்பில் வடகிழக்கு தமிழ் மக்களினாலும் சர்வதேச சமூகத்தினாலும் பல்வேறு சந்தேகங்கள் எழுப்பபப்பட்டிருந்தன. ஆனால் அவற்றினையெல்லாம் புறந்தள்ளி கிழக்கு தொல்பொருள் செயலணியின் செயற்பாட்டினை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மிகவும் திட்டமிட்ட வகையில் நகர்த்தி வருகின்றார்.

கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகம் இல்லை. கிழக்கு மாகாணம் சிங்கள பௌத்த மக்களுக்குரியது என்ற வகையில் காய்களை நகர்த்தி வருகின்றார். அதற்காக கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த, வாழும் இடங்களில் பௌத்த தொல்லியல் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றினை நேரடியாக அரசாங்கம் செய்யும்போது ஏற்படும் சர்வதேச அழுத்தங்கள் மற்றும் தமிழர்களின் அழுத்தங்களை குறைப்பதற்காக சில பௌத்த பிக்குகளைக் கொண்டு சில முரண்பாடுகளை தமிழர் தாயகப் பகுதிகளில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் ஒரு கட்டமாகவே மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பகுதியில் பிக்குகள் மேற்கொண்ட அச்சுறுத்தல் நடவடிக்கைகள் அமைகின்றன.



மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதியை பொறுத்தவரையில் அவர் மட்டக்களப்பு மாவட்டத்தினை பௌத்தர்களின் பூமியாக மாற்ற வேண்டும் என்பதில் பல காலமாக செயற்பட்டு வருகின்றார். அவரது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்கள், அவரை எதிர்ப்பவர்களுடன் கடுமையான மோதல்களில் ஈடுபட்டும் வருகின்றார்.

குறிப்பாக மங்களராமய விகாராதிபதியை பொறுத்தவரையில் அவர் என்றும் மகிந்த ராஜபக்சவின் தீவிர விசுவாசியாகவே இருந்து வருகின்றார். கடந்த நல்லாட்சிக் காலத்தில் மகிந்த ராஜபக்சவை விகாரைக்கு அழைத்து வந்து அவருக்காக பெரும் நிகழ்வினையே ஏற்பாடு செய்திருந்தார்.

கிழக்கில் பௌத்த சிங்கள வாதத்தினை வேரூன்றச் செய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் மிகவும் தீவிரமாக செயற்பட்டுவரும் நிலையில், சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக அதனை வேறு வடிவில் வேரூன்றச் செய்யும் செயற்பாடுகளை அவர் மேற் கொண்டு வருகின்றார்.



குறிப்பாக கடந்த காலத்தில் மகிந்த ராஜபக்ஸ ஜனாதிபதியாக இருந்தபோது போரதீவுப்பற்று, பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுகளில் சிங்களவர்களை குடியேற்றுவதில் மிகவும் தீவிரமான செயற்பாடுகளை குறித்த மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மேற்கொண்டுவந்த நிலையில், அதனை தடுக்க முற்பட்ட அரச அதிகாரிகள் தாக்கப்பட்டதுடன் அவர்கள் கடமையினை செய்யவிடாது தடுக்கப்பட்டனர். குறித்த தேரர் மீது அதிகாரிகளுக்கு இருந்த அச்சம் காரணமாக அவர் மேற்கொள்ளும் நடவடிக்கையினை தட்டிக்கேட்க அரச அதிகாரிகள் அச்சம் கொள்ளும் நிலையே ஏற்பட்டது.

மட்டு. **நகரான்**

குறிப்பாக குறித்த தேரர் அரச அதிகாரிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களிலெல்லாம் அப்பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் இருக்கும் போதும் அவர்கள் குறைந்தது தாக்குதலை தடுக்ககூட நடவடிக்கையெடுக்காமல் வேடிக்கை பார்க்கும் நிலையே இருந்துவருகின்றது.

அவருக்கு அன்றைய அரசிடம் இருந்த செல்வாக்கு, அவருக்கு வழங்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் காரணமாக அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையே இருந்து வருகின்றது. அதற்கு காரணம் அவருக்கு அரசாங்கம் பூரண சுதந்திரம் வழங்கியிருக்கின்றது.

இந்த நிலையிலேயே இன்று கிழக்கு தொல் பொருள் செயலணி உருவாக்கப்பட்டு அதற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்தும் சர்வதேச சமூகத்திடம் இருந்தும் பல்வேறு அழுத்தங்களும் எதிர்ப்பு குரல்களும் வந்த வண்ணமுள்ள நிலையில், அவற்றினை திசைதிருப்பும் செயற்பாடுகள் கனகச்சிதமாக முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் ஒரு கட்டமாகவே அண்மையில் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பன்குடா வெளியில் நடந்த சம்பவத்தினை நோக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக அன்றைய தினம் நடைபெற்ற நிகழ்வு மிகவும் திட்டமிட்டு நடாத்தப்பட்ட நிகழ்வாகவே பார்க்கப்பட வேண்டும். தேர்தல் காலத்தின் போது வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்ட வேற்றுச்சேனைக்கு பிக்கு ஒருவர் சென்று தொல்பொருள் இடம் என்று கூறி அங்கு எல்லையிடும் நடவடிக்கைகளை முன்னெடுத் தபோது அதற்கு அங்குள்ள மக்கள் கடும் எதிர்ப்பினை தெரிவித்து அந்த பிக்குவினை அங்கிருந்து செல்ல வைத்தனர். அதனை தொடர்ந்து மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் சென்று அங்குள்ள தமிழ் மக்களுக்கு ஆதரவாக செயற்படுவது போன்று பாசாங்கு செய்வதைக் கண்ட மக்கள் அவரையும் துரத்தியடித்தனர்.

இவ்வாறான நிலையில் மக்களின் கவனத்தினை திசைதிருப்பி தொல்பொருள் இடங்கள் என தமிழர்களின் பகுதிகளில் எல் லைகள் இடப்பட்டு தமிழர்களின் புராதன இடங்களை பௌத்தர்களின் பூமியாக காட் டுவதற்கான முழுமையான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் தாயகப் பூமியில் உள்ள தமிழர்களின் அடையாளங்களை அழித்து தமது அடை யாளங்களை நிறுவும் செயற்பாடுகளில் இந்த அரசாங்கம் மிகவும் திட்டமிட்டு செயற்படுகின்றது. இதனை எதிர்கொள்வதற்கு தமிழர் தரப்பு எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையினையும் எடுத்ததாக இதுவரை தெரியவில்லை.

குறிப்பாக பன்குடாவெளி போன்ற நூறு வீதம் தமிழர்கள் வாழும் பகுதியை இலக்குவைத்து முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

குறிப்பாக கிழக்கு தொல்பொருள் செயலணி மூலம் தமிழர்கள் முற்றுமுழுதாக வாழும் பகுதிகளே இலக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த செயற்பாடுகளைதடங்கல்இன்றி முன்னெடுக்கவே மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் போன்றோரை அரசாங்கம் பயன்படுத்துகின்றது. அவர் சென்று மோதல் நடாத்தி விட்டு அப்பகுதியில் ஒரு பதற்ற நிலைமையினை ஏற்படுத்தி அப்பகுதியில் பாதுகா ப்பு தரப்பினரை நிலைகொள்ளச் செய்வதன் மூலம் தமது நோக்கத்தினை அடையும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



இந்த செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வக்கற்ற நிலையிலேயே அரசாங்கத்திற்கு துதிபாடும் அரசியல்வாதிகள் இருக்கின்றனர்.


வடகிழக்கில் தமிழர்களின் ஆதிகால இருப்புக்கான அடையாளங்கள் அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவில் கண்டு பிடிக்கப்பட்டுவரும் நிலையில், அவற்றினை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளை மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் போன்றவர்கள் மூலம் அரசு முன்னெடுக்கும் செயற்பாடுகளை தடுத்து நிறுத்தி தமிழர்கள் வரலாற்றினையும் அதன் பொக்கிசங்களையும் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை அனைவரும் இணைந்து மேற் கொள்ள வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகவும் இன்று உள்ளது.

• • •



# நினைவுக் கற்களாகும் சுமைதாங்கிகள்






**தமிழர்களிற்கே உரித்தான ஓர் கலாசாரம்**

அடிப்படை போக்குவரத்து வசதிகள்அற்ற காலத்தில் பாதசாரிகள் கொண்டு செல்லும் சுமையை தனித்து இறக்கி, களைப்பாறி தூக்கிச் செல்லவும், மக்களின் வாழ்வாதாரங்களில் ஒன்றான கால்நடைகளின் தாகம் தீர்க்கவும் என 2000ஆம் ஆண்டுகளிற்கும் முன்பு அமைக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் அதன் முக்கியத்துவமும் அறியாமல் குத்துக்கல்லுகளாக காட்சியளிக்கின்றன.

இயந்திரப் போக்குவரத்திற்கு முன்பு மடம், கேணி, சுமைதாங்கி, ஆவுரஞ்சிக் கல் என்பன கூட்டுணைந்து அமைக்கப்பட்டன. இது 2 ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்பு அறிமுகமானதாக வரலாற்றுப் பேராசிரியர் புஸ்பரட் ணம் அவர் கள் தெரிவிப்பதோடு, இவ்வாறு அமைக்கும் மரபு மாட்டு வண்டில் பயணங்கள் ஆரம்பித்த காலத்துடன் குறைவடைந்துள்ளன என்றும் தெரிவிக்கின்றார். இந்த சுமைதாங்கிகள் அன்றைய காலத்தில் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றவர்களால் முதன் முதலாக அமைக்கப் பட்டதா கவும், வேறும் சில சிலரது நினைவாகவும் அமைக்கப்பட்டன. வடமராட்சியில் ஒருவர் மட்டும் 7 இடத்தில் சுமைதாங்கிகளை அமைத்துள்ளார். போர்த்துக்கேயர் காலத்தில் அவர்கள் இதனை கருத்தில் கொள்ளவில்லை. அதனால் இவை தப்பிப்பிழைத்ததாகவும் அவர் கூறுகின்றார்.

**2 ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்பு தமிழர்கள் மத்தியில் இருந்த ஓர் கலாசாரம்**

2009இற்குப் பின்பு இது பௌத்த வழிபாட்டு ஆரம்பமா எனவும் கேள்வி எழுப்பியதோடு, அந்த திசையிலும் சிலர் ஆராய முற்பட்டபோதும், அது உண்மையில்லை எனக் கண்டறியப்பட்டது. 2 ஆயிரத்து 500 ஆண்டிற்கு முன்பே மாடு வளர்த்தமையும், அக் காலத்தில் ஆவுரஞ்சி இருந்தமையினை காண்பிப்பதோடு யாழ்ப்பாணத்தில் 17ஆம் நூற்றாண்டில் இவைகள் அமைக்கப்பட்டமைக்கான சான்றுகள் ஆவண ரீதியாக உள்ளன. வீரத்தை என்ற பெயரையுடைய நினைவு கல்வெட்டுகளில் அவை காணப்படுகின்றன.

ஆவுரஞ்சிக் கல் மற்றும் மடம், சுமைதாங்கி, கால் நடைக்கான தண்ணீர் தொட்டி அனைத்தும் கூட்டிணைந்து அமைக்கப்படும் நடைமுறை இலங்கையில் யாழ்ப்பாணத்தில் மட்டுமே காணப்படுகின்றது என வரலாற்றுப் பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவிப்பதோடு, இவ்வாறு அமைக்கும் மரபு மாட்டு வண்டில் பயணங்கள் ஆரம்பித்த காலத் துடன் குறைவடைந்துள்ளன என்றும் கூறியிருந்தார். அவர் கூறியதை அவ்வாறான மையங்களில் தொல்லியல் திணைக்களத்தினால் நாட்டப்பட்டுள்ள அறிவித்தல் பலகைகளும் உறுதி செய்கின்றன.

**ந.லோகதயாளன்**

இவ்வாறு யாழ்ப்பாணத்தின் ஓர் அரும் பொக்கிசமாக காணப்படும் இந்த வகையான ஆயிரத்திற்கும் மேற்பட்ட சொத்துக்கள் 60 ஆண்டுகளிற்கு முன்புவரை, யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, காரைநகர் முதல் அனைத்துப் பிரதேசத்திலும், காணப்பட்டதாக கூறப்படுகின்றது. இவை அனைத்துமே அமைக்கப்பட்ட காலத்தின் போக்கு



வரத்துப் பாதைகளை மையமாக கொண்டே அமைக்கப்பட்டது. அதாவது கால் நடையாக பயணிப்போர் தாகம் தீர்க்க, களைப்பாற என்பதற்கும் அப்பால், மடங்களில் இரவில் தங்கி பயணிக்கும் வசதியுடனேயே அமைக்கப்பட்டன. போக்குவரத்துப் பாதையில் அமைக்கப்பட்டதனால் அந்தப் பாதைகளே பிற்காலத்தில் வீதிகளாக மாற்றமடைந்த போது வீதி அகலிப்பின் காரண மாக இவற்றின் முக்கியத்துவத்தையும், மகத்துவத்தையும் வரலாறு தெரியாதோர் இடித்து அழித்தமை மனவேதனைக்குரியது.

**இதன் மகத்துவத்தையும், வரலாற்றையும் அடுத்து வரும் சந்ததியினருக்கு எடுத்துச் செல்ல வேண்டும்**

இதன் பெருமையை அறியாதவர்கள் அழித்தனர் என்றால், அறிந்தவர்கள் மௌனமாக இருப்பதால், எஞ்சியவையும் அழிவடையவே செய்யும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைக்கப்பட்டபோதும், வன்னிப் பகுதியில் இவற்றினை காண முடியாதுள்ளது. ஒரு சில இருக்கக்கூடும். வன்னியிலே அதிக குளம், அதிக மரம் இருந்தமையினால் இவற்றின் தேவை காணப்படாமல் இருந்திருக்கக் கூடும். இவற்றின் மூலமும் தமிழர்களின் தொன்மை எடுத்தியம்பப்படுவதனாலேயே இதன் தோற்றம் ஒன்றை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்குள்ளும் தற்போது அமைத்து வருகின்றோம் என்றார் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்கள்.

இதேநேரம் நல்லூர் சங்கிலியன் வீதியில் தனது வீட்டின் முன்பாக ஓர் ஆவுரஞ்சிக் கல்லினை கடந்த 3 வருடங்களிற்கு முன்பு நாட்டி, அதன் அருகில் நீர்த் தொட்டியினையும் அமைத்துள்ள ஆர்.நிசாந்தன், (வயது 36) என்னும், ஒப்பந்த பணியாற்றுபவரிடம் இதனை ஏன் நாட்ட விரும்பினீர்கள், இந்தக்கல்லை எங்கு பெற்றீர்கள், இதன் முக்கியத்துவத்தை அறிவீர்களா? என கேள்விகளை அடுக்கினேன்.

அதற்கு அவரும் சளைக்காமலே பதிலை அளித்தார். அதாவது மன்னர் காலம் முதல் காலனித்துவ ஆட்சிக் காலங்களில் எமது பரம்பரையினர்மாடுகளைஎவ்வளவுஅன்பாகவும்,அடையாளமாகவும் வளர்த்துள்ளனர் என்பதனை எடுத்துக்காட்டும் அடையாளம் இது. யாழில் எங்கெல்லாம் நீர் நிலைகள் உள்ளனவோ அதன் அருகே இந்த ஆவுரஞ்சிக் கல்லும் இருந்துள்ளது. ஆனால் நீர் நிலைகளை ஆக்கிரமித்து கட்டுமானத்தில் ஈடுபடுவோர் அவ்வாறான தமது ஆக்கிரமிப்பு வெளித் தெரிந்துவிடும் என்பதற்காக அதன் அருகே இருந்த சுமைதாங்கிக் கற்களை இடித்தழித்ததோடு இந்த கற்களை பிடுங்கி எறிகின்றனர். அவ்வாறு எறியப்பட்டிருந்த ஓர் கல்லை பக்குவப்படுத்தி அதே பயன்பாட்டில் ஈடுபடுத்தியுள்ளேன் என்றார்.


ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்பு வீதிகளில் சீமெந்து தூண்களோ அல்லது கட்டிடங்களோ காணப்படாதமையினால் இதன் பயன்பாடு இன்றியமையாது காணப்பட்டிருப்பினும், தற்போது மாடுகளிற்கு உரஞ்சுவதற்கு போதிய இடங்களும் இருக்கலாம். ஆனாலும் புதிதாக அமைக்காதுவிடினும் இருப்பதனை பேணிப் பாதுகாத்து, அதன் முழுப் பயன்பாட்டை அடைய வழி சமைக்க வேண்டும்.

**இவற்றினை ஆலயங்களினால் பாதுகாக்க முடியும்.**

இன்றும் யாழ்ப்பாணத்தில் காணப்படும் பல நூற்றுக்கணக்கான ஆவுரஞ்சிகளில் அநேகமானவை ஆலயங்களை அண்டியே காணப்படுகின்றன. அவற்றில் பல ஆலயங்கள் இவற்றினை மூடிமுட் கம்பி வேலிகளை அமைத்தும் சிலவற்றினை அழித்தும் வருவது கவலை யளிப்பதாக மூத்த அர்ச்சகர் ஒருவர் தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

இதேநேரம் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் முன்பாகவுள்ள சிறாப்பர் மடத்தின் வாசல் அருகே இருந்த சுமைதாங்கி, ஆவுரஞ்சிக்கல், கால்நடைக்கான நீர்த் தொட்டியில் இன்று சுமைதாங்கியை காணவில்லை. அதேபோல் மடத்தை புனரமைக்க தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியை பெறமுடியவில்லை. இதன் பயன்பாடு தொடர்பில் அப்பகுதி மூத்தவர்களிடம் கேட்டபோது, என்னதான் மாற்றமும் வளர்ச்சி யும் வந்தாலும் பழமையை மறந்தால் எதுவுமேஆகாது என்பதற்கு இதுவும் நல்லதோர் உதாரணம். விஞ்ஞான காலத்தில் ஓர் விடயத்தை கூறும் வடிவம் வேறு; பழங்காலத்தில் கூறிய வடிவம்வேறு.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்



# தமிழீழ விடுதலைப் பாடல்களும் எஸ்.பி. பாலசுப்பிரமணியமும்

பிரபல பின்னணிப் பாடகர் S.P.பாலசுப்பிரமணியம் அவர்கள் 25.09.2020 அன்று சுகயீனம் காரணமாக காலமானார். அவர் தமிழீழ விடுதலைப் பாடல்கள் சிலவற்றை பாடியிருந்தார். அவர் பாடிய பாடல்களையும், பாடிய சந்தர்ப்பங்களையும் ஓவியர் புகழேந்தி அவர்கள் நினைவுகூர்ந்து எழுதிய நினைவுப் பதிவு ஒன்றை எமது 'இலக்கு' இணையத்திற்காக பிரத்தியேகமாக அனுப்பியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்காக பாடல் ஒலிப்பேழை தயாரிப்பு பொறுப்பை என்னிடம் விடுவதாக தமிழீழத் தேசியத் தொலைகாட்சி பொறுப்பாளர் போராளி சேரலாதன் சொன்னபோது, "சேரா, நான் பாடல் எழுதுகின்றவனும் இல்லை, இசையமைக்கின்றவனும் இல்லை, பாடுகின்றவனும் இல்லை. எப்படி அதை நான் செய்ய முடியும்" என்றேன். "அதனால் தான் அண்ணா, உங்களிடம் அப்பொறுப்பைக் கொடுக்கின்றோம்" என்றார்.

முதல் ஒலிப்பேழை – கடற்புலிகளுக்காக செய்தோம். கவிஞர் காசி ஆனந்தன் மூன்று பாடல்களை எழுதினார். புலவர் புலமைப்பித்தன் அவர்களை சந்தித்து, பல ஆண்டுகாலம் இயக்கத்துடன் விடுபட்டிருந்த தொடர்பை புதுப்பித்தேன். அவர் மூன்று பாடல்களை எழுதினார். (1. இது கடற்புலிப்படை, 2. மனித சுனாமி தான்.. 3. நாம் நீரிலும் வெடிக்கும் எரிமலைகள்). கவிஞர் புதுவை இரத்தினதுரை, கு. வீரா., போன்றவர்களின் பாடல்களும் இருந்தன.

பாடல்கள் அனைத்திற்கும் அற்புதமான எழுச்சி மிகுந்த இசையை இசையமைப்பாளர் தேவேந்திரன் அமைத்திருந்தார். பாடல்களை, S.P பாலசுப்பிரமணியம், S.M. சுரேந்தர், திப்பு, கார்த் திக், T.L. மகாராசன், மனோ, சுஜாதா, கல்பனா, மாணிக்க விநாயகம், சத்தியன், ஹரீஸ் ராகவேந்திரா போன்ற தமிழ்த்திரையுலகின் புகழ்பெற்ற பாடகர்களை பாடவைத்தேன்.

"இத்தொகுப்பில் S.P பாலசுப்பிரமணியம் அவர்களை எப்படியாவது பாடவைத்து விடுங்கள் அண்ணா" என்று தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி பொறுப்பாளரும் போராளியுமான சேரலாதன் என்னிடம் கேட்டபிறகு, புலவர் புலமைப்பித்தன் அவர்களிடம் செய்தியைக் கூறினேன். அவர் S.P.B அவர்களுடன் எனக்கு தொடர்பைத் ஏற்படுத்தித் தந்தார்.



அப்போது(2006-2007) S.P.B ஜெயாதொலைக்காட்சியில் குழந்தைகளுக்காக ஒரு நிகழ்ச்சியை (என்னோடு பாட்டுப் பாடுங்கள்) நடத்திக்கொண்டிருந்தார். நானும் அந்நிகழ்வை தொடர்ந்து பார்ப்பதுண்டு. ஒரு இசைப் பேராசிரியர் வகுப்பு எடுப்பது போல் இருக்கும். "அந் நிகழ்வை பதிவு செய்து தலைவர் பிரபாகரன் அவர் கள் தொடர்ந்து பார்த்து வருகிறார். இசையைக் கற்றுக்கொள்பவர்களையும் இசையில் ஆர்வமுள்ளவர்களையும் பார்க்கச் சொல்வதன் மூலம் நிறைய கற்றுக்கொள்ளலாம் என்று பலரையும் பார்க்கச் சொல்லியிருக்கிறார். தலைவருக்கு மிகவும் பிடித்த நிகழ்வு" என்று சேரலாதன் என்னிடம் கூறியதோடு எஸ்.பி. பாலசுப்பிரமணியம் அவர்களை சந்திக்கும் போது இதைக் கூறுங்கள் அண்ணா என்றார்.

ஓவியர் **புகழேந்தி**

முதல் ஒலிப்பேழைக்காக பாடல் பதிவுக்கு வந்தபோது சந்தித்தேன். அதுதான் முதல் சந்திப்பு. 21.06.2007 அன்று சாலிகிராமத்தில் உள்ள ஒலிப்பதிவுக் கூடத்தில் அந்த சந்திப்பு நிகழ்ந்தது. முதல் சந்திப்பு போல் இல்லாமல் பல நாட்கள் பழகியதுபோல் மிக இயல்பாக இருந்தது. சந்தித்த உடனே தலைவர் குறிபிட்டதாக சேரலாதன் கூறிய செய்தியைக் கூறினேன். மிகவும் மகிழ்ந்தார். "அவர் பார்த்து கருத்துக் கூறியது எனக்குப் பெருமை" என்றும் நெகிழ்ந்தார். இதை தலைவருக்கும் பகிர்ந்தேன்.

S.P. பாலசுப்பிரமணியம் ஒலிப்பதிவுக் கூடத்தில் என்னோடும் இசையமைப்பாளர் தேவேந்திரன் அவர்களோடும் சில நிமிடங்கள் பொதுவான உரையாடலுக்குப் பிறகு தான் பாட வேண்டிய பாடல் வரிகளைக் கேட்டுப் பெற்று தான் கொண்டுவந்திருந்த ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தில் எழுதினார். மிகவும் வியந்து அது குறித்து அவரிடம் கேட்டேன் "திரைப்படப் பாட லாக இருந்தாலும் அல்லது தனி தொகுப்புப் பாட லாக இருந்தாலும் தன்னுடைய இந்த பதிவேட்டில் பாடல் வரிகள், எந்தத் தேதியில், யாருடைய இசையமைப்பில், எந்த ஒலிப்பதிவுக் கூடத்தில் பதிவு செய்யப்பட்டது என்பதை எழுதி வைப்பது எனது வழக்கம்" என்று கூறினார்.

அதன்பிறகு பாடலின் இசைக்கோர்வையை தன்னுடைய Tape Recorder இல் பதிவு செய்து தரக் கூறி பாடலை அதனோடு இணைத்து ஒருமுறைக்குப் பலமுறைப் பாடிபார்த்தபிறகு பாடல் பதிவுக்குத் தயாரானார்.

அன்று அவர் பாடியப் பாடல் கவிஞர் கு.வீரா எழுதிய

**"உலக மனிதம் தலைகள் நிமிரும்**
**விடுதலைப் போரின் வீரத்திலே"**

என்ற பாடல். அந்தப் பாடலை அவர் எழுதிக் கொண்டிருக்கும் போதே ஒவ்வொரு வரிகளையும் உள்வாங்கி "உணர்வோடும் உண்மையோடும் கவித்துவத்தோடும் எழுதியிருக்கிறார்" என்று வீராவைப் பாராட்டினார். இசையைக் கேட்டபிறகு தேவேந்திரனையும் பாராட்டினார்.

**"எங்கள் மண்ணில் நாங்கள் வாழ**
**எவரும் தடுத்தல் சரிதானா**
**சொந்த மண்ணில் வாழும் உரிமை**
**எமக்கு என்ன கிடையாதா**
**குண்டை போட்டார் கூச்சல் போட்டோம்**
**எவரும் அதனைக் கேட்கவில்லை**
**குண்டை போட்டார் குண்டே போட்டோம்**
**கூடா தென்றால் ஞாயமில்லை"**

என்று சரணத்தில் வருகின்ற வரிகள் S.P. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான வரிகள். மிகவும் அற்புதமாக அப்பாடலை பாடினார். பாடி முடித்ததும் நானும் தேவேந்திரனும் அவரைப் பாராட்டினோம். **'எங்களின் கடல்'** தொகுப்பில் இறுதிப் பாடலாக அதை வைத்தோம்.

இரண்டாவதாக இம்ரான் பாண்டியன் படையணிக்காக 'ஈட்டிமுனைகள்' என்றத் தலைப்பில் ஒரு பாடல் ஒலிப்பேழையை தயாரித் தோம்.

அனுராதபுர விமானப்படைத் தளம் தாக்குதல் 'எல்லாளன் நடவடிக்கை' குறித்த ஒலிப்பேழை தொகுப்பையும் மூன்றாவது முறையாக தயாரிக்கும் பொறுப்பு என்னிடமே வழங்கப்பட்டது. அத்தொகுப்பிற்கும் இசையமைபாளர் தேவேந்திரன் தான்.

"இத்தொகுப்பில், S.P பாலசுப்பிரமணியம் அவர்களை எப்படியாவது இரண்டு பாடல்களையாவது பாடவைத்து விடுங்கள் அண்ணா" என்று தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தி வந்தார் சேரலாதன்.

"அள்ளித்தின்ற ஆனா எழுதிய – அன்னை மண்ணைக் கடக்கிறோம். அன்னியச் சேனை கோட்டை இருக்கும் அனுராதபுரத்திற்கு நடக்கி றோம்" என்ற யோ. புரட்சியின் பாடலையும்,

**"வானத்திலேறியே வந்து வந்து குண்டு**
**போட்டவன் கோட்டையிலே – துட்ட**
**காமினிமுன்னர் எல்லாளனை வீழ்த்திய**
**கோட்டையின் வாசலிலே"**

என்ற புதுவை இரத்தினதுரையின் பாடலையும் S.P பாலசுப்பிரமணியம் மிக அற்புதமான உணர்ச்சிகளோடும், சங்கதிகளோடும் அவருக்கே உரிய தனித்துவத்தோடும் பாடியிருந்தார்.

இதே காலகட்டத்தில் எல்லாளன் திரைப் படப் படப்பிடிப்பு தமிழீழத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அத்திரைபடத்திற்கான அண்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களை சிங்களம் தான் தீர்மானிக்கின்றது

**இராமு மணிவண்ணன்** சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் பொதுநிர்வாகத் துறை தலைவர் பேராசிரியர்

**சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் பொதுநிர்வாகத் துறை தலைவர் பேராசி ரியர் இராமு.மணிவண்ணன் அவர்கள் இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலை இங்கு தருகின்றோம்.**

**கேள்வி:-**


***13ஆம் திருத்தச் சட்டத்தின் இன்றைய நிலை மற்றும் அதன் சாதக பாதகம் குறித்து உங்கள் கருத்து ?***

**பதில்:**

13ஆம் திருத்தச் சட்டத்தின் ஆரம்பம் என்பது 1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்போது ஆரம்பிக்கப்பட்டது. தனிநாட்டுக் கோரிக்கை, அரசியல் தீர்வு, சமஸ்டி, என்று பேசும் போது, ஒரு காலகட்டத்தில் அதிகாரப்பகிர்வு என்று பேசப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் ஊடாக நிர்வாகம், அதிகாரப்பகிர்வு மூலம் அரசியல் பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தலாம் என நம்பி, இந்திய அரசு இலங்கை அரசாங்கத்துடன் மேற்கொண்ட ஒரு ஆலோசனை தான் 13ஆவது திருத்தச் சட்டம். தனிநாட்டுக் கோரிக்கையை இந்தியா ஆதரிக்காத போது, இந்த சட்டம் மூலம் குறைந்தபட்ச தீர்வையாவது அளிக்கலாம் என இந்தியா கருதியது.

இதை சட்ட ரீதியாகவும், அரசியல் சாசன ரீதியாகவும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது குறித்து வடக்கு கிழக்கு மற்றும் தமிழக தமிழ் மக்களும் கருதியதுடன். இதன் மூலமாக அதிகாரப் பரவலாக்கல் தீர்வை எட்ட முடியும் எனவும் கருதினர்.

ஆனால் இலங்கை அரசாங்கம் 1987இலிருந்து கடந்த 30 வருடங்களாக 13ஆவது திருத்தச் சட்டத்தை எழுத்து மூலமாக, ஒப்பந்த ரீதியாக ஏற்றுக் கொண்ட போதிலும்கூட, அதை நிறைவேற்றுவதற்குரிய கடமை உணர்ச்சியோ காணப்படவில்லை. அத்துடன் இத் திருத்தச்சட்டத்தை முன்னெடுத்தால், இதன் மூலம் இனப் பிரச்சினைக்கோ, தனிநாட்டுக் கோரிக்கைக்கோ தீர்வு காணலாம் என்ற எண்ணம் இல்லை.



இலங்கை ஒற்றைக் கலாச்சார, பண்பாட்டைக் கொண்ட நாடாக இருப்பதால், சிங்கள மக்கள் இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தை தனிநாட்டிற்கான ஒரு முதல் படியாகவே பார்க்கிறார் கள். சமஸ்டி என்பதைக்கூட அவர்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை.

இதனால் தான் கடந்த 30 ஆண்டு காலமாக இந்தியாவும் இதற்கான அழுத்தத்தைப் பிரயோகித்தும்கூட அது தொடர்பாக எந்தவொரு முன்னெடுப்பும், விருப்பமும் இல்லாததால் தான் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

2009 போருக்குப் பின் 13ஆம் திருத்தத்தைக் கொண்டு வந்து ஒரு அதிகாரப் பகிர்வைநோக்கி நகர்வோம் என இலங்கை அரசாங்கம் கூறியிருந்தது. இந்த கூற்றில்கூட அவர்களுக்கு ஒரு ஈடுபாடு இருக்கவில்லை.

கடந்த 10 ஆண்டுகளில் பன்னாட்டு ரீதியிலான இனப்படுகொலை, போர்க் குற்ற விசாரணை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை உட்பட பல பிரச்சினைகள் இருந்த போதும்கூட இலங்கை அரசாங்கம் இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏதோவொரு உரையாடலுக்காக பயன்படுத்தி வந்தார்கள்.

கடந்த 30 ஆண்டுகளாக இந்த 13ஆவது திருத்தச் சட்டம் பற்றி இந்தியாவுடன் உரையாடலுக்காகவே பயன்படுத்தி வந்துள்ளனர். இதேநேரம் தமிழ் மக்களுக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை வழங்காததும் இலங்கை அரசின் இரட்டை வேடத் தன்மையைக் காட்டுகின்றது.



தற்போது சில காலங்களாக இலங்கை அரசாங்கம் 13ஆம் திருத்தச் சட்டத்திலிருந்து விலகிச் செல்வதை நாம் காணக்கூடியதாக இருக் கின்றது. இதற்கு சிங்கள மக்கள் முடிவெடுக்க வேண்டும் என்று அரசாங்கம் சொல்வதிலிருந்து, சிங்கள அரசாங்கம் இதற்கு ஒரு முடிவு எடுக்காது என்று நாம் சொல்ல வேண்டும்.

அத்துடன் இலங்கைக்கு இருக்கும் பொருளாதார, அரசியல் பிரச்சினைகள், சீனாவுடனான ஒரு நெருக்கமான உறவுகளை வைத்து பார்க்கும் போது சீனாவுடன் இராணுவ, புவிசார், அரசியல் தளத்திற்கு நகர்ந்த பிறகு, இந்தியாவுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்புகளை பேணுவதற்கு இந்த 13ஆவது திருத்தச் சட்டம் உதவும் என இலங்கை அரசு நம்புவதால், அந்த துருப்புச் சீட்டை வீசியெறியவில்லை. இந்திய அரசு இதை மீண்டும் பேசினாலும்கூட சிங்கள அரசோ, அரசியல்சாசனமோ, சிங்கள மக்களோ இவற்றை ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.

ஆதலால் தான் தமிழ் மக்களின் அரசியல் உரையாடலுக்கும், வேண்டுதலுக்கும் அமைய 13ஆவது திருத்தச் சட்டத்தையும் கடந்து நாம் ஏதாவது ஒரு நிலைப்பாட்டை உறுதியாக முன்னெடுத்து உரைக்க முயல வேண்டும். மொழி, இனம், கலாச்சாரம், நிலம் போன்றவற்றை அடக்கிய ஒரு அதிகாரப் பகிர்வை வைத்து நாம் நகர வேண்டும். இதை இலங்கை அரசாங்கம் கூறுவது போல 13+ என்பதால் நமக்கு ஏதாவது நன்மை உள்ளதா என்று பார்க்க வேண்டும். இதை ஒரு துருப்புச் சீட்டாக இலங்கை அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டிருக்குமா? இந்திய அரசாங்கம் உரையாடலுக்காக இதை நகர்த்திக் கொண்டிருக்குமா என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

13ஆம் திருத்தச் சட்டத்தை நாங்கள் நிர்வாக ரீதியாகப் பார்க்கின்றோம். ஆனால் இலங்கையில், வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் நிலப்பரப்பு தொடர்பாக ஒரு வரையறைக்கு உட்படுத்த வேண்டும். அங்கு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தவும், மக்கள் தொகை கணக்கெடுப்பில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரவும் பெரும் முயற்சியை 30, 40 வருடங்களாக தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. அடுத்த பத்து ஆண்டுகளில் மக்கள் தொகை விகிதாசாரத்தை இலங்கை அரசு முழுமையாக கொண்டு வந்த பின்னர், இலங்கை அரசாங்கம் 13ஆவது திருத்தத்தை மட்டுமல்ல, அதைக் கடந்தும் அவர்களால் பேச முடியும். அதிகாரப் பகிர்வை அவர்கள் செய்யப் போவதில்லை. இதற்கான அடித்தளங்களை அவர்களால் உருவாக்க முடியும்.

சிங்களக் குடியேற்றங்கள் கிழக்கில் மட்டுமல்லாது, வடக்கிலும் முல்லைத்தீவிலும் பெருமளவில் கொண்டிருக்கின்றன. இதை நாம் தடுத்து நிறுத்த வேண்டும். இந்தப் பகுதிகளில் இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கும் போது, இராணுவம் இங்கிருந்து 20 ஆண்டுகளாக விலகாத போது நமக்கான தீர்வு எவ்வாறு கிடைக்கும்.

அத்துடன் தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களை சிங்களவன் தான் தீர்மானிக்கின்றான். அங்கு ஒரு பொருளாதார வளர்ச்சிக்கோ, வாழ் வாதாரங்களைப் பற்றியோ ஒரு உயர் நிலையை ஏற்படுத்துவதற்கு பொருளாதார அதிகாரங்கள் மக்களுக்கு வேண்டும். சமூக கட்டுப்பாடுகளை ஏற்படுத்த இராணுவம் அங்கிருந்து விலக வேண்டும். சமூகக் கட்டுப்பாடு என்று சொல்லும் போது, ஒரு சமூகம் இயல்பாக இயங்க வேண்டுமானால், அந் தப் நிலப்பரப்பில் இராணுவம், காவல்துறை போன்றவை நிலை கொள்ளுமாக இருந்தால். சமூகசூழல் அங்கிருக்க வாய்ப்புக் கிடையாது. எனவே இராணுவத்தினர் அங்கிருந்து விலக வேண்டும்.



வடக்கு கிழக்கில் இராணுவத்தினரால் குடியேற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இரண்டு பிரதேசங்களிலும் இராணுவத்தினர், சிங்களக் குடியேற்றங்கள் ஒரு குறிப்பிட்டளவு பிரதேசத்தில் இருக்கும் போது. அவற்றை விலக்கக் கோர வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தை கோருவதாக இருந்தாலும் சரி அல்லது அதற்கு அப்பால் கோருவதாக இருந்தாலும் சரி அதில் ஒரு நிலைப்பாடு இருக்க வேண்டும்.

• • •



# சீனாவில் கலாச்சார இனவழிப்புக்கு உள்ளாகும் 'உவீகர்' இன முஸ்லிம் மக்கள்

ஆகக் குறைந்தது பத்து இலட்சம் 'உவீகர்' *(Uighurs)* முஸ்லிம் இனத்தைச் சார்ந்த மக்கள் பெரும்பான்மையாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தடுப்பு மையங்களின் வலையமைப்பின் உள்ளே நடக்கும் நிகழ்வுகளை அண்மையில் பெற்று க்கொள்ளப்பட்ட இரகசிய ஆவணங்கள் வெளிக் கொணர்ந்திருக்கின்றன. இவ்வாறான தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்படுபவர்கள், சீன அரசினால் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதையும், முகாம்களுக்கு உள்ளே இவர்கள் எவ்வாறு அரசின் கடுமையான கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டுக்கண்காணிக்கப்படுகிறார்கள் போன்ற விடயங்களையும் இந்த இரகசிய ஆவணங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றன.

இரகசியமாகப் பேணப்பட்ட இந்த ஆவணங்களைப் பெற்றுக்கொண்டு, அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திய புலனாய்வு ஊடகவியலாளரின் பன்னாட்டு சம்மேளனம், அசோசியேற்றட் பிரெஸ்ஸை *(Associated Press)* உள்ளடக்கிய ஏனைய பன்னாட்டு ஊடகங்களுடன் இவற்றைப் பகிர்ந்து கொண்டுள்ளதுடன், பிரமாண்டமான இந்தத் தடுப்பு முகாம்கள் எப்படி இயங்குகின்றன என்பது தொடர்பாக மிக முக்கியமான தகவல்களையும் வழங்கியிருக்கின்றது.

முஸ்லிம் மக்களை அதிகளவில் கொண்ட சிறுபான்மைக் குழுமங்களைச் சார்ந்தவர்களைத் தடுத்து வைக்க, எப்படிப்பட்ட மூலோபாயங்களை சீன அரசு கைக்கொள்கிறது என்பதையும் அவர்களுக்கு மூளைச்சலவை செய்வதோடு மட்டுமன்றி, அவர்கள் நாளாந்தம் பேசுகின்ற மொழியைக்கூட எவ்வாறு மாற்றியமைக்கிறது என்பதையும் இந்த ஆவணங்கள் வெளியுலகத்துக்கு வெளிப்படுத்தியிருக்கின்றன.

தடுப்பு முகாம்களில் காணப்படும் காவல் கோபுரங்களைப் பற்றியும் எப்போதும் பூட்டப்பட்டு வைத்திருக்கப்படும் இரட்டைக் கதவுகள், தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காக பொருத்தப்பட்டுள்ள வீடியோக் கமராக்கள், அவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் என்பவற்றுடன் பெரும்பான்மையான சீன மக்களினால் பேசப்படும் மண்டறின் மொழியை அவர்கள் எவ்வளவு நன்றாகப் பேசுகிறார்கள், அரசின் கொள்கைகளை எவ்வளவுக்கு மனனம் செய்கிறார்கள், குளித்தல், கழிப்பிடங்களைப் பயன்படுத்துதல் போன்ற மிக அடிப்படையான செயற்பாடுகள் தொடர்பான கடுமையான விதிமுறைகளை எப்படிக் கைக்கொள்கிறார்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக, அவர்களை வகைப்படுத்தும் புள்ளியிடுதல் முறையைப் பற்றியும் இந்த ஆவணங்கள் மிக விரிவான தகவல்களைக் கொண்டிருக்கின்றன.

"இது ஜோர்ஜ் ஓர்வெல் *(George Orwell)* முன்வைத்த வழிமுறைகளைத் தழுவி மேற்கொள்ளப்படும் ஒரு இனவழிப்பு" என்று மனித உரிமைச் சட்டத்தரணியான ஆசலன் இவ்திக்கார் *(Arsalan Iftikhar)* அல்ஜசீராவுக்குத் தெரிவித்தார்.

தமிழில் **ஜெயந்திரன்**

"இவை வெறும் கட்டுக்கதைகளே" என்று ஐக்கிய இராச்சியத்துக்குரிய சீனத் தூதுவர் லியூ சியாஓமிங் *(Liu Xiaoming)* கசிந்த இந்த ஆவணங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தார்.

### தொழில்நுட்பவியலின் பயன்பாடு

ஆகக் குறைந்தது ஒரு மில்லியன் (பத்து இலட்சம்) உவிகர் இனத்தைச் சேர்ந்த முஸ்லிம்களும் ஏனைய இனங்களைச் சார்ந்த முஸ்லிம்களும் இந்தத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்று ஐக்கிய நாடுகள் தாபனம் தெரிவிக்கும் அதே வேளையில், கடும் போக்குள்ளவர்களை நீக்கி புதிய திறன்களை அவர்களுக்குக் கற்பிக்கும் தொழிற்பயிற்சிக்கூடங்களே இவையென்று சீன அரசு இவற்றுக்கு விளக்கம் கொடுக்கிறது.

பெறப்படும் தரவுகளும் செயற்கை விவேகமும் *(artificial intelligence)* சமூகத்தைக் கடுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க எவ்வாறு பயன்




படுத்தப்படுகின்றன என்ற விடயத்தை இந்த ஆவணங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

பிரமாண்டமான கண்காணிப்புத் தொழில்நுட்பங்களின் உதவியுடன், விசாரணை செய்யப்படுவதற்கோ அல்லது தடுத்து வைக்கப்படுவதற்கோ பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கட்சி அதிகாரிகளை உள்ளடக்கிய பல பத்தாயிரக் கணக்கானவர்களின் பெயர்களை கணினிகளால் ஒரு வாரத்துக்குள்ளேயே வெளியிட முடிந்தது.

இனங்களை முழுமையாக இலக்கு வைத்து, குறிப்பாக தமக்கென சொந்தமான மொழியையும் கலாச்சாரத்தையும் கொண்டிருக்கின்ற, 'உவிகர்'என அழைக்கப்படும் துருக்கிய நாட்டைச் சேர்ந்த ஒரு மில்லியன் எண்ணிக்கையைக் கொண்ட சிறுபான்மை மக்களை கண்காணித்து, வகைப்படுத்தி, அவர்களைப் பலவந்தமாக உள்வாங் குதற்கென வடிவமைக்கப்பட்டிருக்கும் ஓர் மிகப் பாரிய ஒழுங்கமைப்பை மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன என்று நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

"சீனஅரசு உண்மையில் என்ன செய்கின்றது என்பதை முன்னெப்போதும் இல்லாத வகையில் இப்போது அறிந்து வைத்திருக்கிறோம்" என்று சீனாவின் தூர மேற்குப் பிரதேசமான ஸிங்ஜாங் *(Xinjiang)* பிரதேசத்தின் பாதுகாப்பு தொடர்பான நிபுணத்துவம் கொண்ட ஏட்ரியன் ஸென்ஸ் *(Adrian Zenz)* தெரிவித்தார்.

உவிகர் இனத்தவரையும் ஹான் சீன இனத்தவரையும் உள்ளடக்கிய நூற்றுக்கணக்கானோர் வன்முறைகளிலும், பழிவாங்கும் நடவடிக்கைகளிலும் இனக் கலவரங்களிலும் கொல்லப்பட்டுள்ள ஸிங்ஜாங் பிரதேசத்தை, தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக பல தசாப்தங்களாகவே சீன அரசு போராடிக் கொண்டிருக்கிறது.

உவிகர் இனத்தைச் சார்ந்த தீவிரமான போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்குப் பதிலளிக்கும் விதமாக 'பயங்கரவாதத்துக்கு எதிரான மக்களின் போர்' என்ற பெயரில் சீன அதிபரான ஸீ ஜின்பிங் *(Xi Jinping)* 2014ஆம் ஆண்டில் ஒரு தாக்குதலை மேற்கொண்டார்.

அதேவேளை 2016ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் திபெற்றில் முன்னர் பணிபுரிந்த கடும்போக்காளரானஸீசென்குவாங்கோ*(XiChenQuanguo)* ஸிங்ஜாங்கின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டபோது, இப்பிரதேசத்தின் மீதான ஒடுக்குமுறை கணிசமான அளவு அதிகரித்தது. கிடைக்கப்பெற்ற ஆவணங்களில் பெரும்பாலானவை 2017ம் ஆண்டில் வெளியிடப்பட்டவை.



'தாங்கள் கைக்கொண்ட நடைமுறைகள் வெற்றியளித்திருக்கின்றன' என்று சீன அரசு இந்த ஆவணங்களில் தெரிவிக்கிறது.

"பயங்கரவாதத்தை முன்கூட்டியே தடுப்பதற்காகவும், தீவிரவாதத்தைக் களைவதற்காகவும் உரியகாலத்தில் ஸிங்ஜாங்கில் தாம் முன்னெடுத்த தொடர் நடவடிக்கைகளின் காரணமாகவே, மூன்று வருட காலத்துக்குள் எந்தவிதமான பயங்கரவாத தாக்குதலும் அங்கு இடம்பெறவில்லை" என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரான ஜெங் ஷ_வாங் *(Geng Suang)* தெரிவித்தார்.

### கோட்பாட்டுக் கல்வி

பெயர் குறிப்பிடப்படாதவர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் கிடைத்திருந்தன. கிடைத்த இந்த ஆவணங்கள் தொடர்பாக நிபுணர்களைக் கலந்தாலோசித்தும் உள்ளடக்கத்தைச் சரி பார்த்தும், ஒப்பங்களை ஒப்பிட்டுப்பார்த்தும் ஆவணங்களின் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டது.

தடுப்பு முகாமில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைக் கொண்ட ஒரு துண்டுப்பிரசுரம், மக்களை இலக்கு வைக்க தொழில்நுட்பத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்று அறிவுறுத்தும் செய்திக் கையேடுகள், கூடாத வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது, ஆபாசப்படங்களைப் பார்க்க கூடாது, பிரார்த்தனை செய்யாது உணவு உண்ண கூடாது என்று தன்னோடு உடனிருந்தவர்களுக்குக் கூறியதற்காக பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# தகவல் தொழில்நுட்பம் உலோகத்தின் மூலப்பொருள்



**உ. டனன்சியா** வணிகப்பிரிவு - 2019 யாழ்.பல்கலைக்கழகம்

கி.மு. 3000 ஆண்டுகளிலிருந்தே தகவல்களை தேக்குதலும், மீட்டலும், கையாளுதலும், பரிமாறலும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது. தகவல் தொழில்நுட்பம் எனும் சொல், புத்தியல் காலப்பொருளில் 1958இல் ஆர்வார்டு என்னும் வணிக மீள்பார்வை என்ற கட்டுரையில் முதன் முதலில் தோன்றியது எனலாம்.

தகவல்தொழில்நுட்பம் (Information technology) என்பது, தகவல் அல்லது தரவுகளை கணினியைப் பயன்படுத்தி தேக்குதல், ஆராய்தல், மீட் டல், செலுத்துதல், கையாளல்சார்ந்த அறிவியல் தொழில்நுட்பமாகும். இங்கு தகவல் என்பது வழக்கமாகத் தொழில் வணிகம் அல்லது பிற நிறுவனம் சார்ந்ததாக அமையும். தகவல், தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தின் உட்பிரிவே தகவல் தொழில்நுட்பம் ஆகும். தகவல் இல்லையேல் வாழ்க்கை இல்லை. தகவல் பரிமாற்று ஊட கம் செயலற்றுப் போனால், மனித வாழ்க்கை நிலைகுத்தி போய்விடும் என்ற அளவிற்கு தகவல் தொழில்நு ட்பம் நம் வாழ்வில் இணைந்துள்ளது.

மனிதன் தோன்றிய காலத்திலேயே தகவல் தொடர்பாடலும் தோன்றி விட்டது. ஆதிகாலத்தில் மொழி காணப்படவில்லை. எனினும் அவர்கள், ஓவியங்கள் மூலமும், ஒலி, இசை, தீ என்பன மூலமும் தகவல்களை பரிமாறிக் கொண்டனர். அதாவது அவர்களின் எண்ணங்களை ஓவியம் மூலமாக வரைந்து வெளிப்படுத்திக் கொண்டார்கள். இதற்கு ஆதாரமாக உலகில் பல இடங்களில் குகை ஓவியங்கள் கிடைத்துள்ளன. தென்னமெரிக்கர், பழங்கால சீனர்கள் புகைகளை உருவாக்கி கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். ஒலி, தீ, இசை, சைகை என்பவற்றால் தகவல்களை பரிமாற்றிய மனிதர்கள் பின்னர் கல்வெட்டு, ஓலைச் சுவடி, செப்பேடு போன்றவற்றின் மூலம் தகவல்களை பிறரிற்கு வெளிப்படுத்தினர்.

அதன் பின் தகவல் தொடர்பு அச்சடித்த காகிதங்கள், புத்தகங்கள், பத்திரிகைகள் என்று வளர்ந்தது. பின்னர் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தபால், தந்தி, தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி என்று தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனால் தகவல்கள் உடனுக்குடன் மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட்டன. இதன் மூலம் தகவல் தொழில்நுட்பத்தில் புதிய அத்தியாயம் உருவாக்கப்பட்டது.

இப்போது நாம் பயன்படுத்தும் தகவல் தொழில்நுட்பத்திற்கு முன்னோடியாக Telegraph கண்டுபிடிப்பு காணப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில் Telegraph தொழில்நுட்பமே மிக வேகமான தகவல் தொழில்நுட்பமாக இந்தியாவில் காணப்பட்டது. ஆரம்ப காலத்தில் உலகம் என்பது மிகப்பரந்துபட்டதொன்றாக காணப்பட்டது. இன்று தகவல் தொழில்நுட்பத்தின் விளைவாக உலகம் சிறு குடும்பமாக சுருங்கி விட்டது.

நாட்டு நடப்புக்களை அறிந்து கொள்ள செய்திகளையும், பத்திரிகைகளையும் பயன்படுத்தினர். ஆனால் தற்போது செய்திகளை பார்வையிட பத்திரிகைகளை எதிர்பார்த்து நிற்பதில்லை. உடனுக்குடன் இணையத்தினுள் பிரவேசித்து உலக நடப்புக்களை அறிந்து கொள்கின்றனர். இத ற்குக் காரணம் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியாகும். இதன் மூலம் காலதாமதமும், ஏனைய வீண்விரயமும் தடுக்கப்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் மூலம் வாழ்க்கைத்தரம், வாழ்க்கை முறை என்பன மாறியுள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

இத்தகவல் தொழில்நுட்பம் மூலம் பல்வேறு நன்மைகள் காணப்படுகின்றது. அதாவது மாணவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கு வகுப்பறையில் மட்டுமல்லாது, எந்தவொரு இடத்திலும் எந்தவொரு நேரத்திலும் கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியும். அதாவது அறிவகம் (nanasala.lk), e – தக்சலாவ, வலைப் பாடசாலை (www. edulanka. lk) விதுமங்பெத (www.vidumanpetha.com) போன்ற




வலைத்தளங்களைப் பயன்படுத்தி கல்வியை மேம்படுத்த தகவல் தொழில்நுட்பம் உதவுகின்றது.

மற்றும் மருத்துவ பரிசோதனைக்கு காந்தப்பிரிவு விம்பமாக்கற் பொறிமூலம் (Magnetic resonance imaging/ MRI ) உடலின் உட்பகுதிகளை விபரமான ஒளிப்படங்களை பெறவும் மற்றும் மின் இதய வரை யப் பொறி (Electro cardio gram / ECG) மூலம் இதயத்துடிப்பை அவதானிப்பதற்கும் தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. இதய நோய் திரையிடற்பொறி,(Echo Cardio Graphy) மின் மூளை வரையியற்பொறி,(Electro Encepahlo Gram) குருதியில் குளுக்கோசின் அளவை சோதிக்கும் பொறி (Blood Sugar Glucose meter) எனும் பல்வேறு தொழில்நுட்ப சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

விவசாயத்துறையும் தகவல் தொழில்நுட்பம் மூலம் முன்னேறிச் செல்கின்றது. அதாவது வானொலிச் சைகை அடையாளமிடல் உபகரணம் (Radio signal markers) மூலம் விலங்குகளை கணக்கிடல், அவை இருக்கும் பிரதேசத்தைக் கண்டறிதல் என்பவற்றிற்கு வானொலி சைகை அடையா ளமிடல் உபகரணம் பயன்படும். தனது நேரத்தையும், உழைப்பையும் செலவிட்டு விவசாயம் செய்த விவசாயிக்காக மிகவும் நவீன தொழில்நுட்பவியலைக் கொண்ட பல தன்னியக்கப் பொறித்தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் விவசாயிகளின் பணிகள் எளிதாதல் மாத்திரமின்றி, மிகவும் உயர்ந்த நிலைமையில் உள்ள பயிர்களைச் சந்தைக்கு விடுவிப்பதற்கான ஆற்றலும் விவசாயிகளுக்குக் கிடைத்துள்ளது.

தகவல் தொழில்நுட்பவியல் மக்களின் பணிகளை இலகுவாக்குதல் மாத்திரமல்ல, எங்கள் வாழ்வில் ஓர் சிறந்த நண்பனாக மாறியுள்ளது. நாம் நண்பனை தகாத விதத்தில் பயன்படுத்தினால், எங்களுக்கு மாத்திரமல்ல முழுச்சமூகத்திற்கும் பாதிப்பு ஏற்படலாம்.

அதாவது சமூக வலைப் பின்னலூடாக தகாத நட்பு ஏற்படலாம். இணையத்தில் பொருத்தமற்ற வலைப் பக்கங்களுடன் இணைவதால், ஒருவரிற்கு உள நோய்கள் ஏற்படுவதோடு அவரிற்கும் சமூகத்தி ற்கும் பாதகம் ஏற்படுகின்றது. மற்றும் ஒருவருடைய தனிப்பட்ட வாழ்விற்கு தீங்கு பயக்கும் படங்களையும், ஒளியுருக்களையும் உற்பத்தி செய்தல். இத்தகவல் தொழில்நுட்பத்தால் Hackers வேலைப்பாடு அதிகரித்துள்ளது. இது இன்றைய உலகின் மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமைந்து ள்ளது.

இத்தகைய காரணங்களின் விளைவாக தகவல் தொழில்நுட்பம் பாதகங்களை ஏற்படுத்துகின்றது என்பது பலரின் அபிப்பிராயமாகும். எனினும் அதன் மூலம் அமைக்கப்பட்ட தொகுதிகள் மனிதனின் பல பணிகளை எளிதாக்குகின்றன. எனவேதான் தற்கால உலகிற்கு தகவல் தொழல்நுட்ப வளர்ச்சி இன்றியமையாத ஒன்றாகக் காணப்படும் அதேவேளை, side effect உம் தவிர்க்க முடியாததாக உள்ளது. தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் கவனம் செலுத்தி அவதானமாக பயன்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்.

• • •

## நினைவுக் கற்களாகும் ... தொடர்ச்சி...

அதன் ஊடகாவே எமது இனமும், கலை, கலாசாரம், பண்பாடு, மொழி என்பவற்றின் அடையாளங்களும் அதன் தொன்மையும் உள்ளதனை என்றுமே நிரூபிக்கும் ஓர் சான்று ஆவணம் இவை என்றார்.

கீரிமலை சிறாப்பர் மடமும் இந்த ஆவுரஞ்சிக்கல், தொட்டி என்பன 150 ஆண்டுகளிற்கு முன்பு அமைக்கப்பட்டது உறுதியானது. ஏனெனில் கொங்கொங் வங்கியில் பணியாற்றிய கதிரவேலுச் சிறப்பாரே இதனை கட்டினார். இவர் 1909ஆம் ஆண்டில் காலமானார். இவர் சண்டிலிப்பாயை சேர்ந்தவர். ஆகவே இதனை அமைத்தவர் மறைந்தே இன்று 110 ஆண்டுகள் கடந்து விட்டன. இவரே சண்டிப்பாய் பாடசாலை அருகில்உள்ள ஆவுரஞ்சியினையும் அமைத்ததாக கூறப்படுகின்றது என்றார்.

### அபிவிருத்தியின் பெயராலேயே அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன.

குறித்த விடயம் தொடர்பில் தாவடியில் உள்ள பதிவாளர் அ.செந்தில்குமரன் என்னும் 58 வயதுக் குடும்பஸ்தர் தெரிவிக்கையில், எனது பாடசாலைப் பருவத்தில் தற்போதைய யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் முதல் காங்கேசன்துறைக்கு இடைப்பட்ட பகுதியில் 15இற்கும் மேற்பட்ட இடங்களில் காணப்பட்ட இந்த மரபுச் சின்னங்களில் இன்று ஒன்றுகூடக் காணப்படவில்லை. இதேநேரம் நந்தாவில் முனியப்பர் ஆலயம் முன்பாக தொட்டி மட்டும் அடையாளமாகவுள்ளது என்றார்.

இதேநேரம் யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் அராலிப் பகுதிகளை அண்டிய கிராமங்களில்இவை அதிகமாகவும்காணப்படுகின்றமை தொடர்பில் வினாவியபோது, அப்பகுதியின் பல பகுதிகள் உவர் நிலங்களாக காணப்பட்டதனால் இவ்வாறான தொட்டிகள் ஆவுரஞ்சிக்கல் அமைத்து கால்நடைகளிற்காக நீர் நிரப்பி வைத்தனர். இதே



நேரம் பலாலி வீதியிலும் பல காணப்பட்டு வீதி அகலிப்பின்போது அழிவடைந்தபோதும் கந்தர் மடம் சந்தியில் இரு கற்கள் இருந்தன.கல்லும் தொட்டியும் வீதி அகலிப்பின்போது அழிக்கப்பட்டமை வேதனை அழிப்பதாக இருந்தாலும், எச்சங்கள் மிஞ்சியிருந்தன. அவைகளையும் நீர்க்குழாயினை தாக்கும் பணியில் ஈடுபட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினர், அதன் முக்கியம் அறியாது முழுமையாக அழித்து விட்டனர் என பலாலி வீதியில் வர்த்தக நிலையம் நடாத்தும் திருமேனி-ஜெகநாதன், என்னும் 68 வயது வர்த்தகர் தெரிவிக்கின்றார்.

தென்மராட்சியில் வரணி இடைக்குறிச்சி, சாளுக்குறிச்சிக் குளத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆவுரஞ்சிக்கல்லே யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படும் ஆவுரஞ்சிக் கல்லுகளில் பெரிய கல் எனக் கருதப்படுகின்றது. இதன் உயரம் 5 அடியினையும் தாண்டுகின்றது.

### தொல்லியல் திணைக்களத்தின் படிக்கல் லா அல்லது தடைக்கல்லா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

பல ஆவுரஞ்சிக் கல் உள்ளிட்ட மடங்கள், கேணிகள் போன்றவற்றை தொல்லியல் திணைக்களம் தனது சின்னமாக பிரகடனப்படுத்தி அதனை புனரமக்க தடை போட்டுள்ளது. இவ்வாறு தடை போட்டதனால் அவை எஞ்சியுள்ளனவா அல்லது உள்ளதால் தடை போடப்பட்டுள்ளதா என்ற கேள்வி எழுந்தாலும் பல இடத்தில் இன்மும் சில அரைப் பங்கு அழிவடைந்து எஞ்சியவை காணப்படுவதனை இந்த தொல்லியல் திணைக்களங்களும் கண்டுகொள்ளவில்லை.

குறிப்பாக மானிப்பாய் பொதுச் சந்தை முன்பாகமடம், தொட்டி என்பனஅழிவடைந்தபோதும், ஆவுரஞ்சிக்கல் வீதியோரம் இன்றும் உள்ளது. அதனை என்ன என அருகில் இருந்தவர்களிடம் வினாவியபோது அது கிலோ மீற்றர் கல் என ஒருவர் கூறினார். இன்னுமோர் பெண்மணியே மிகத் தெளிவாக இது ஆவுரஞ்சிக் கல் இதனுடன் இருந்த சுமைதாங்கி, தொட்டி அழிவடைந்த தடயமே அதில் உள்ளது. என எச்சங்களை காண்பித்தார்.

தமிழர்களின் தொன்மை வரலாறு, அதாவது எமது மரபுகளை எமது எதிரிகள், ஆக்கிரமிப்பாளர்கள் மட்டுமல்ல, நாமும் அழிப்பது கவலைக்குரியது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கே உரித்தான இந்த மரபுவழிச் சின்னம் ஆகியவற்றுடன், புண்ணியம் கருதி அமைக்கப்பட்ட இவற்றினை புதிதாக அமைக்காது விட்டாலும் இருப்பதனை பேணிப் பாதுகாப்பதற்கும் இதனை பாதுகாக்க வேண்டிய தேவையினை அடுத்த சந்ததிக்கும் கொண்டுசெல்ல வேண்டிய பொறுப்பு அனைவரிற்குமே உரியது.

• • •

## திலீபனின் கனவுடன் ... தொடர்ச்சி...

னத்தில் மக்கள் கண்ணீர் வெள்ளத்தில் பிரசாத் தலைமையில் இறுதி வணக்க உரைகள் நடந்து திலீபன் விரும்பியபடி யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அவ ரின் புகழுடல் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ் வில் சமுதாய மருத்து வத்துறை பேராசிரியர் டாக் டர் சிவராஜா அவர்களிடம் பின்னாளில் எமது விமா னப்படை தளபதியாகவிருந்து திலீபன்நாளில் வீரமரணம் அடைந்த சங்கர் அண்ணா மற்றும் தேவர் அண்ணா ஆகியோர் திலீபன் உடலை உத்தி யோகபூர்வமாக கையளித்தார்கள்.

ஆனால் திலீபன் நீ எங்கே ஐயா போகிறாய்? என்னும் காசியண்ணாவின் பாடல் வழிநெடுகிலும் ஒலிபெருக்கியில் ஒலித்ததை, அன்று யாழ். குடா நாட்டில் வாழ்ந்த மக்களின் காதுகளிற்குள் இன்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும். என் காதுகளிலும் இன்றும் ஒலித்து கொண்டிருக்கிறது.

எமது தலைவர் தன் வாழ்நாளின் மூன் றில் இரண்டு நாட்களை எமது மக்களின் விடுத லைக்காகவே அப்பணித்து பணிபுரிந்தார், அவ்வா றான தளபதிகளையும், போராளிகளையும் உரு வாக்கினார். இன்றும் அவர் விதைத்த வீர விதைகள் உலகெங்கும் உறங்கு நிலையில் உள்ளன. தலைவர் அவர்கள் மாவீரர் நாளிலும், திலீபன் நினைவு நாளிலும் உணாவிரதம் மேற்கொள்வது வழக்கம். அவ்வாறே பல போராளிகளும் மக்களும் கூட திலீபனின் நினைவாக இன்றும் உண் ணாநோன்பிருந்து, அவன் வலியை நினைவு கூரு வதுடன் தம் உள உறுதி தளராமல் போராட வேண் டும் எனும் சிந்தனையை வளர்த்தவர்களாகவே இருப்பதும் இன்றைய அரசின் நெருக்கடிகளும் நிச்சயமாக ஓர் மாபெரும் மக்கள் புரட்சிக்கு வழி சமைக்கும் என நம்புவோம்.

அன்பான தமிழ் பேசும் உலகத் தமிழர்களே ஒன்றாய் சிந்திக்கும் காலம் தமிழருக்கு வந்து விட்டது. வரலாற்று காலம் முதல் போராடினோம். நாடுகளை ஆண்டோம். எம்மவர் சூழ்ச்சிகளாலும் எதிரிகளின் சதிகளாலும் நாடற்ற ஓர் இனமாக இன்றும் தொடர்கிறோம். கோடிக்கணக்கில் இன்று உலகெங்கும் பரந்து கிடக்கின்ற தமிழினத்திற்கு ஒரு நாடு வேண்டும். இதற்கு எப்படி உலகத் தமிழராக எங்கள் அறிவை கூட்டாக பயன்படுத்த வேண்டும் என்று எல்லோருமாக சிந்திப்போம்! செயற்படுவோம்! செயற்படுத்துவோம்! திலீபன் நீ எங்கே ஐயா போகிறாய்என்று கேட்டு வழியனுப்பினோம். இப்போ உலகத் தமிழர் நாம் எங்கே போகின்றோம்? என எல்லோர் மனங்களிலும். எங்களை நாங்களே ஒரு கேள்வியை கேட்டு நாடு ஒன்று அமைக்க பாடுபட வேண்டும் என்று கேட்டு எனது பன்னிரண்டு நாட்க ளிலும் எழுந்த நினைவு பகிர்வை நிறைவு செய்கிறேன்.

• • •

## திலீபனுக்காக இணை ... தொடர்ச்சி...

போன்ற பல்வேறு நெருக்கடிகள் தமிழ் மக்கள் முன் பாக தீர்க்கப்படாதவையாக இன்னும் உள்ளது. இத னைவிட அரசியல் தீர்வு என்பது கேள்விக்குறியா கவே இருக்கப்போகின்றது.

இந்தப் பின்னணியில் திலீபனை முன்னி றுத்தி ஒன்றிணைந்த தமிழ் கட்சிகள் பொதுவான கோரிக்கைகளை வென்றெடுப்பதில், பொது வான வேலைத்திட்டம் ஒன்றின் அடிப்படையில் செயற்பட வேண்டும் வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களுடைய விருப்பம். இந்தளவு பிரச்சினைகள் தமிழ் மக்கள் முன்பாக இருக்கும் நிலையில் தமது தனித்துவத்தைப் பாதுகாப்பது என்ற நிலையில், மக்களின் நலன்களை மறந்து செயற்படக்கூடாது என்பதை தேசியத்தை முன்னிறுத்திச் செயற்படும் தமிழ்க் கட்சிகள் உணர வேண்டும்.

## 13 ஆவது திருத்தம் ... தொடர்ச்சி...

சனிக்கிழமை இடம்பெற்றது. சுமார் ஒரு மணி நேரத் துக்குத் தொடர்ந்த இந்தப் பேச்சுக்களின் போது, இரு தரப்புக்களுக்கும் தொடர்புடைய பல விடயங்கள் ஆராயப்பட்டன.

மக்களின் ஆணை மற்றும் அரசமைப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூல மும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூல மும் தமிழ் மக்கள் உட்பட அனைத்து இன மக் களினதும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற் கான நடவடிக்கைகளை இலங்கை முன்னெடுக் கும் என இதன்போது பிரதமர் மகிந்த ராஜபக்ச நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இருநாடுகளும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் அவர்களது நிலைப்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

எனினும் கொழும்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ச அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் 13ஆவது திருத்தம் குறித்த விடயங்கள் குறிப் பிடப்படவில்லை. மாறாக இந்திய அறிக்கை போன்று இரு நாடுகளின் தலைவர்களும் ஆரா ய்ந்த பரந்துபட்ட விடயங்கள் குறித்தே அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடபகுதி கடலில் இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை குறித்து இந் திய பிரதமரிடம் எடுத்துரைப்பேன் என பிரதமர் வெள்ளிக்கிழமை வடபகுதி மீனவர்களிடம் தெரிவித்த போதிலும், இந்த விடயம் தொடர் பில் எடுக்கப்பட்ட நிலைப்பாடு குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. இருநாட்டு மீனவர்கள் தொடர்புபட்ட விடயங்களுக்கு வழமையான கலந்தாலோசனைகள், இரு தரப்பு அதிகாரிகள் ஊடாக தீர்வு காண்பதற்கு இரு நாடுகளும் நடவ டிக்கை எடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீனாவில் கலாச்சார இன ... தொடர்ச்சி...

விதிக்கப்பட்ட உவிகர் இனத்தைச் சேர்ந்த உள் ளூர் கட்சிப் பணியாளர் தொடர்பான வழக்கு போன்றவற்றை ஆவணங்கள் உள்ளடக்கியருந்தன.

தடுப்பு முகாம்கள் தொடர்பாக உவிகர் மற்றும் கசாக் மக்கள் வழங்கிய சாட்சிகள், செய்மதிப் படங்கள், குறிப்பிட்ட பிரதேசத்தைப் பல கட்டுப்பாடுகள் நடுவில் தரிசித்த ஊடகவியலாளரின் பயணங்கள் ஆகியவற்றிலிருந்து ஏற்கனவே பெறப்பட்ட தகவல்களை, மிகப் பலம் வாய்ந்த ஸிங்ஜாங்கின்கம்யூனிசகட்சியின்அரசியல் மற்றும் சட்ட விவகாரங்களுக்கான ஆணையத்தினால் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த இந்த ஆவணங்கள் உறுதிப்படுத்தியருக்கின்றன.

இந்ததடுப்பு முகாம்களுக்கும் ஸிங்ஜாங் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் அதிதீவிர இலத்திரனியல் கண்காணிப்புகளுக்குமிடையேயும் இருக்கின்ற நேரடித்தொடர்புகளை இந்த ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

“பிரச்சினைகள் ஏற்பட முன்னரே அவை நடைபெறாது தவிர்ப்பதே இந்தக் கண்காணிப்பின் நோக்கம்” என்று ஒரு ஆவணம் குறிப்பிடுகின்றது. அரசுக்குச் சொந்தமான இராணுவ ஒப்பந்தக்காரரர் ஒருவரால் உருவாக்கப்பட்ட ‘ஒருங்கிணைக்கப்பட்ட இணைந்த செயற்பாட்டுத்தளம்’ *(Integrated Joint Operations Platform – IJOP)* என்று அழைக்கப்படும் ஒரு ஒழுங்கமைப்பின் ஊடாகவே இக் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

நாட்டை விட்டுத் தப்பிச் செல்லுதல், பிரார்த்தனை செய்யும்படி மற்றவர்களைத் தூண்டுதல், அரசினால் கண்காணிக்கப்பட முடியாத அலைபேசி செயலிகளை *(phone apps)* பயன்படுத்துதல் போன்ற சந்தேகத்துக்கிடமான நடத்தைகளில் ஈடுபடுவோரின் பெயர்களை மேற்குறிப்பிட்ட *IJOP* இலத்திரனியல் தளத்தில் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

‘சந்தேகத்துக்கு இடமானவர்கள்’ எனக்கருதப்பட்டவர்கள் பின்னர் விசாரணைக்காக அழைக்கப்பட்டு, வீட்டுக்காவலிலிருந்து மூன்று அடுக்கு கண்காணிப்பைக் கொண்ட தடுப்பு முகாம் வாழ்க்கை அல்லது சிறைவாசம் என்ற ஒழுங்கமைப் பின் பல்வேறு தெரிவுகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

இந்த தடுப்பு முகாம்களுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் தடுத்து வைக்கப்படுபவர்கள் கட்டாயக் கோட்பாட்டுக்கல்விக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

### சரியான நடத்தையைக் கற்றுக்கொள்ளல்

கோட்பாட்டுக் கல்வியூட்டல் பின்னர் சரியான நடத்தையைக் கற்றுக்கொள்ளும் செயற்பாட்டுடன் இணைக்கப்படுகிறது. உரிய நேரத்தில் தலைமுடி வெட்டுதல் மற்றும் முகச் சவரம் செய்தல், ஒழுங்குக்கிரமமாக ஆடைகளை மாற்றுதல், வாரத்துக்கு ஒரு தடவை அல்லது இரு தடவைகள் நீராடுதல் போன்ற நடத்தைகளைக் கற்றுக் கொள்ளுமாறு அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

‘உய்கர் இனமக்கள் வன்முறை இயல்பு கொண்டவர்கள் எனவே அவர்கள் பண்படுத்தப்படவேண்டும்’ என்ற ஹான் சீன அரசின் பொதுவான கண்ணோட்டத்தை இந்த ஆவணங்களின் தொனி எதிரொலிக்கிறது.

நடைமுறையில் தடுத்து வைக்கப்படுபவர்களின் நாளாந்த வாழ்க்கை ஓர் இராணுவம் நடத்தப்படுவது போன்று இறுக்கமாகக் கட்டுப்படுத்தப்படுவதுடன் அவர்களின் ஒவ் வொரு அசைவும் மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது.

ஒலிபெருக்கியில் பேசுவதன் மூலமே கழிப்பிடத்துக்குச் செல்வதற்கான அனுமதியை என்னால் பெறமுடிந்தது என்றும் தனது அறையில் தனக்கும் தன்னுடன் இருந்தவர்களுக்கும் ஒவ்வொரு மணித்தியாலமும் பத்து நிமிடங்கள் மாத்திரமே கழிப்பிடப் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என்று முன்னர் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குல்பாக்கர் ஜலி லோவா *(Gulbakhar Jalilova)* தெரிவித்தார்.

“எமக்குத் தரப்பட்ட இந்தக் குறுகிய நேரத்துக்குள் எம்முள் ஒரு சிலரே கழிப்பிடத்துக்குப் போகக்கூடியதாகவிருந்தது.”

மண்டறின் மொழியறிவு, கோட்பாடு, ஒழுங்கு போன்ற விடயங்கள் தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டவர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்கள் பெறும் புள்ளிகள் கணினியில் பதிவு செய்ய ப்பட்டு அவர்களது வளர்ச்சி ஒப்புநோக்கப்பட்டது.

அதிக புள்ளி பெறுபவர்களுக்கு குடும்ப உறவுகளைச் சந்திக்கும் சலுகை வழங்கப்பட்டதுடன் பயிற்சியை நேரகாலத்துடன் நிறைவுசெய்யும் வாய்ப்பும் வழங்கப்பட்டது. மதிப்பீடுகளில் குறைவான புள்ளிகளைப் பெறுபவர்கள் மேலும் கடுமையான நிர்வாகத்தைக் கொண்ட தடுப்பு முகாம்களுக்கு நீண்ட காலத்துக்கு அனுப்பப்பட்டார்கள்.

கோட்பாடு, சட்டம், மண்டறின் மொழி ஆகியவற்றை ஓராண்டு கற்றுக்கொண்ட பின்னரே, ‘தொழில் திறன் விருத்திக்கு’ மாணவர்கள் அனுப்பப்பட்டார்கள்.

தடுப்பு முகாம்களை விட்டு இவர்கள் வெளியேறும் போது தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ள ஆவன அனைத்தும் செய்யப்பட வேண்டும் என்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

குறைந்தசம்பளம்கொடுக்கப்படும்வேலைகளுக்கான ஒப்பந்தத்தில் ஒப்பமிட தாம் வற்புறுத்தப்பட்டதாக தடுத்துவைக்கப்பட்டவர்களில் சிலர் விபரிக்கிறார்கள்.

ஸென்ஸைப் பொறுத்த வரையில் “இது ஒரு கலாச்சார இனவழிப்பு என்பதுடன் ஒரு சமூகத்தை வலுக்கட்டாயமாக மீள வடிவமைக்கும் செயற்பாடு” ஆகும்.

“ஒரு சிறுபான்மைச் சமூகத்தை முற்று முழுதாக மாற்றியமைப்பதே இச்செயற்பாடுகளின் அடிப்படையான நோக்கமாகும்” என்று ஸென்ஸ் மேலும் தெரிவித்தார்.

**நன்றி - அல்ஜசீரா**

## தமிழீழ விடுதலைப் ... தொடர்ச்சி...

ணன் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் எழுதிய

**“தாயக மண்ணே! தாயக மண்ணே!!**
**விடைகொடு தாயே! விடை கொடு**
**தலைவனின் தேசப் புயல்களுக்காக வழிவிடு**
**தாயே! வழிவிடு”**

என்ற பாடலை எனக்கு அனுப்பிய சேரலாதன், உடனடியாக தேவேந்திரன் அவர்களை இசை அமைக்கச் செய்து, S.P பாலசுப்பிரமணியம் அவர்களை பாடவைத்து அனுப்பி வையுங்கள் அண்ணா” என்றார், சேர லாதன்.

அண்ணன் கவிஞர் புதுவை இரத்தினதுரை, பாடல் காட்சிப்படுத்தலுக்கு ஏற்ற வகையில் இசைக்கோர்வை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்தும் பிற விடயங்கள் குறித் தும் நீண்ட நேரம் என்னிடம் கைபேசியில் உரையாடினார். அன்பைப் பொழிந்தார். நெகிழ்ந் தார். அதன் பிறகு அவரோடு தொடர்பே இல்லை.

அப்பாடல் தொகுப்பிற்கு இடையில் இப்பாடலையும் இசையமைத்து, S.P.B அவர்களைக் கொண்டு பாடச்செய்து உடனடியாக அனுப்பினேன். மிகவும் அற்புதமாக அப்பாடலை S.P.B பாடியிருப்பார். புதுவையின் வரிகளுக்கு ஏற்ற இசையை தேவேந்திரன் கோர்த்திருந்தார். காட்சிப்படிமங்களாக விரியும் அந்த இசைக்கான வரிகளுக்கு S.P.B தன் குரலால் உயிர் கொடுத்திருந்தார்.

அந்தப் பாடலில் இருந்த உயிர்த்துடிப்பு மிக்க காட்சிப் படிமங்கள் திரைப்படத்தில் காட்சிப்படுத்தப்படவில்லை.

**காற்றும் தமிழும் உள்ளவரை அவரும் வாழ்வார்.**

## ஐ.நா. பொது சபை ... தொடர்ச்சி...

உரிமைகள் அமைப்பு முன்வைத்துள்ளது.

1-மியான்மரில் ரோஹிங்கியா இனத்தினர் மீதும் இன்னும் பிற இனக்குழுக்கள் மீதும் மியான்மர் அரசு நடத்தும் இனப்படுகொலையை தடுக்க அழுத்தம் கொடுக்க வேண்டும்.

2-மியான்மரில் ரோஹிங்கியாக்களை குடியுரிமை கொண்டவர்களாக அங்கீகரிக்க மியான்மர் ராணுவ அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

3- மியான்மரின் அரக்கன் மாநிலத்தில் மனித உரிமை மீறல்களை நிறுத்தவும் கண்காணிக்கவும் ஐ.நா. அமைதிப்படையை ஐ.நா.பாதுகாப்புசபை அனுப்ப வேண்டும்.

4- சர்வதேச நீதிமன்றத்தில் மியான்மருக்கு எதிராக வழக்கிட்டுள்ள காம்பியாவுக்கு ஐ.நா. உறுப்பு நாடுகள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.

5-இனப்படுகொலை அல்லது முரண்பாடு முடிவுறும் வரையிலும் ரோஹிங்கியாக்கள் மியான்மர் குடியுரிமைக் கொண்டவர்களாக அங்கீகரிக்கப்படும் வரையிலும் மியான்மருடனான அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளை முறித்துக் கொள்ள வேண்டும்.

6-ரோஹிங்கியாக்களுக்கு உணவு, மருத்துவம், மற்றும் தங்குமிட உதவிகளை வழங்க சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

7-ரோஹிங்கியாக்களை ‘பெங்காலி’ என அடையாளப்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும் உள்ளிட்ட ஏழு கோரிக்கைகளை மலேசியாவில் இயங்கும் ரோஹிங்கியா மனித உரிமைகள் அமைப்பு *(Myanmar Ethnic Rohingya Human Rights Organisation Malaysia)* விடுத்துள்ளது.

## இந்தியப் பிரதமர் ... தொடர்ச்சி...

த்தை நடைமுறைப்படுத்துவது அவசியம் என பிரதமர் மோடி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தினார்.

மேலும் இந்த சந்திப்பின் தொடக்கத்தில் பேசிய இந்திய பிரதமர் நரேந்திர மோடி, சிறீல ங்கா ஆளும் கட்சியின் சமீபத்திய தேர்தல் வெற்றி யும் ராஜபக்ஷ அரசின் கொள்கைகளும் இந்தியா மற்றும் சிறீலங்கா இடையேயான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்த உதவும் என்று கூறியுள்ளார்.

அத்துடன் இந்தக் கூட்டத்தின்போது பௌத்த கலாசாரத்தை மேம்படுத்துவதற்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர் (இந்திய ரூபாய் மதிப்பில் சுமார் 110 கோடி, சிறீலங்கா ரூபாய் மதிப்பில் சுமார் 278 கோடி) நிதியை இந்தியா இலங்கைக்கு ஒதுக்கியுள்ளது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில் மோடி மற்றும் ராஜபக்ஷ ஆகியோர் இருநாட்டு வர்த்தகம் குறித்தும் விவா தித்தனர்.

“எனது நண்பர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களுடன் உரையாடியதில் பெருமகிழ்வடை கின்றேன். அபிவிருத்தி, பொருளாதார உறவு, சுற் றுலாத்துறை, கல்வி, கலாசாரம், பரஸ்பர நலன்அடிப்படையிலான பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் உட்பட தனித்துவமிக்க இந்திய-இலங்கை இருதரப்பு உறவுகள் குறித்து மீளாய்வு செய்தோம்,” என்று மோடி பதிவிட்டுள்ளார்.